Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 17 செவ்வாய்க்கிழமை (31.03.2015) பக்கங்கள் 20 ஓசை - 182

## மைத்திரி அடுத்த வாரம் பாகிஸ்தான் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் சில தினங்களில் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாத ஆரம்பத்தில் இந்த உத்தியோகபூர்வ விஜயம் அமையுமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தான் பிரதமர் மற்றும் அந்நாட்டு அமைச்சர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது குறித்தும் பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை விரிவுபடுத்துவது தொடரபிலும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாகிஸ்தானுக்கான விஜயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த விஜயத்துக்கான 19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் விவகாரம் பிரதமரின் முடிவுக்கு வரவேற்பு



(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறியதும் எல்லைதாண்டியதுமான இழுவைப்படகு தொழில்முறையை வடபகுதியில் முற்றாக நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளமையை எமது கடற்றொழிலாளர்கள் சார்பில் வரவேற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஏனைய மாவட்டங்களை விடவும் வடபகுதி கடற்றொழிலாளர்கள் சுனாமி அனர்த்தம் மற்றும் நீண்டகால யுத்தம் என்பவற்றால் அதிக இழப்புகளையும் பாதிப்புகளையும் சந்தித்துள்ளனர்.

தற்போதைய அமைதிச் சூழலில் எமது மக்கள் முழுமையாக இல்லாது விட்டாலும் ஓரளவுக்கேனும் இயல்பு வாழ்விற்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

முன்னைய அரசுடனான எமது இணக்க அரசியல் ஊடாக வடபகுதியில் கடற்படையினரால் விதிக்கப்பட்டிருந்த பல்வேறு 19 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக்கு ஒத்துழைக்க பசில் தயார்

(கொழும்பு)

கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கை குறித்து தகவல்களை வழங்குவதாக, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமது சட்டத்தரணிகள் ஊடாக நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்குப் பின்னர் பசில் ராஜபக்ஷ நாட்டிற்கு வருகை தந்து தகவல்களை வழங்குவார் என, அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ளமையினாலும், நாடாளுமன்றத்தில் விடுமுறை பெற்றுக் 19 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பை பதிவுசெய்ய தயக்கம் ஏன்?



### அடம்பிடிக்கும் சம்பந்தன் மீது சுரேஷ் எம்.பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக தேர்தல்கள் செயலகத்தில் பதிவுசெய்யாமல் இன்னும் ஏன் தாமதிக்க வேண்டும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களை மக்கள் மத்தியில் வெளிக்கொண்டு வருமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவருமான சுரேஷ் பிரேமசந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீர்வேலியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு என்பது பிரச்சினையான விடயமாக இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் பதிவு மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றார்கள்.

இந்தப் பதிவினை மேற்கொள்ள முடியாதென்று தமிழரசுக் கட்சி பல முறை சொல்லி வந்திருக்கின்றது. அத்துடன், தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள்.

அதில் முக்கியமாக பேராசிரியர் சிற்றம்பலம் உள்ளிட்ட பலர் 19 ஆம் பக்கம் பார்க்க



## கே.பி. மீதும் விசாரணை

### அஜித் பெரேரா தகவல்

(கொழும்பு)

புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கியஸ்தரான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மீது அரசு விசாரணைகளை மேற்கொள்ள முயற்சி எடுத்துவருவதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து வெளிவிவகார அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கும் என்ற பீதியை முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமே ஏற்படுத்தியிருந்ததாக தெரிவித்திருந்த 19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னணியில் வேம்படி; 28 மாணவிகள் 9ஏ சித்தி

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பரில் இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பாடசாலைகளின் பெறுபேறுகள் பெறப்பட்டதன் அடிப்படையில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முன்னணியில் உள்ளது.

இங்கு 28 மாணவிகள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். இதில் 17 மாணவிகள் தமிழ் மொழி மூலமும், 11 மாணவிகள் ஆங்கில மொழி மூலமும் சித்தி பெற்றுள்ளனர். 8ஏ சித்திகளை 4 பேரும் பெற்றுள்ளனர்.

246 மாணவிகள் இம்முறை சாதாரண தரத்தில் தோற்றிய நிலையில் 245 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 18 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர். 8 பேர் தமிழ் மொழியிலும், 10 பேர் ஆங்கில மொழியிலும் சித்தியடைந்துள்ளனர்.

அத்துடன் 3 பேர் 8ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன், 236 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் அனைவரும் சித்தியடைந்துள்ளனர். 19 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபத்து; இளைஞர் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கண்ணகைபுரம் பகுதியில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் திடீர் விபத்தொன்று ஏற்பட்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

கண்ணகைபுரம், கரும்புத்தோட்டப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரச பேருந்தொன்றை பின்னோக்கிச் செலுத்தியபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பூநகரி, முக்கொம்பன் பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி புறப்பட்ட அரச பேருந்து கண்ணகைபுரம், கரும்புத்தோட்டப் 19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். - கொழும்பு ரயில் சேவை நேர அட்டவணையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளைமறுதினம் ஏப்ரல் 2 ஆம் திகதி தொடக்கம் புகையிரத சேவையில் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக யாழ். புகையிரத நிலையப் பிரதான அதிபர் வ.பிரதீபன் நேற்றுத் தெரிவித்தார்.

காலை 7.10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு செல்லும் யாழ்தேவி புகையிரதம் காலை 6.30 மணிக்கு யாழில் இருந்து புறப்படவுள்ளது.

அதேவேளை, காலை 11.00 மணிக்கு யாழில் இருந்து செல்லும் நகர் சேர் கடுகதி 10.10 மணிக்கு புறப்படும் அதேநேரம், இரவு நேர தபால் 7.05 இற்கு சென்ற புகையிரதம், இரண்டாம் திகதி முதல் இரவு 7.00 மணிக்கு தனது பயணத்தினை ஆரம்பிக்கும்.

அதேநேரம், கொழும்பில் இருந்து 19 ஆம் பக்கம் பார்க்க

# க.பொ.த (சா/த) முன்னணிப் பெறுபேறுகள்

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**

ஞா.கஜவாணி - 9ஏ, ற.பவதாரணி 8ஏபி, சி.ஜா னுகா 8ஏபி, இ.டயானி 8ஏசி, பு.கிருசாந்தி 8ஏசி, அ.சகித்யா 7ஏ2பி, க.கம்சிகா 7ஏபிசி, கு.றுஜானி 7ஏபிசி, ஞா. தர்சி 7ஏபிசி, த.ஜிலுக்சனா 7ஏபிசி பா. பியர்லினி 7ஏ2சி, சி.துஷாந்திகா 7ஏபிசி.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

தமிழ்மொழி மூலம

க.விபுலன் 8ஏசி, நி.எ.ஜீவப்பிரகாஸ் 8ஏஎஸ், செ.சாருஜன் 7ஏ2பி, லோ.பிரி ஜெந்தன் 7ஏ2பி, ல.நிக்ஸ்மன் 7ஏபிஎஸ், ர.சஞ்சீவன் 6ஏ3பி, ம.டெலக்சன் 6ஏ 2பிஎஸ், செ.கஜிந்தன் 6ஏபி2சி, பு.சஞ்சீவ ராம் 5ஏ3பிசி, த.நீராஜா 5ஏ4பி, ஆ.டினுந் 5ஏ2பிசிஎஸ், லோ.றபிசாந் 5ஏபி3சி, நி.சுவஸ்திகன் 5ஏபிசிஎஸ், நா.விதுர்சன் 4ஏ4பிசி, ந.சிந்துஜன் 4ஏ2பி3சி, பெ.அங் கதன் 4ஏ2பி3சி, பா.அகீபன் 4ஏபி4சி, அ.சுஜீபன் 4ஏ3சி2எஸ், யோ.தேவராஜ் 4ஏபி2சி2எஸ்,

ஆங்கிலமொழி மூலம்

யோ.இ.போல்பிரதீப் 7ஏ2பி, க.கௌ சிகன் 5ஏ4பி. (17,66)

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

ம.யூலியேட்சங்கீதா 9ஏ, வி.மிதுசா 8ஏபி, தி.கீர்த் தனா 7ஏ2பி, சி.ரிதுசா 6ஏபி2சி, த.எழில்வாணி 6ஏ2பிசி, இ.யாழ ரசி 5ஏ4சி, ஏ.டக்சன் 5ஏ2பி2எஸ், ர.ரெணு ஜா 5ஏ3பிசி,

**பளை மத்திய கல்லூரி**

கே.திவாரகா 9ஏ, ஜெ.கலைக்சன் 7ஏபிசி, சி. அபிநயா 7ஏபிசி, சி.கேனுசா 7ஏபிசி, சு.தன்சி 7ஏபிசி, ம.மதீசன் 7ஏபிசி, நி.நிகழ்ஜா 5ஏ3பிஎஸ், சி.சாளினி 4ஏ4பி, ப.அபிநயா 4ஏ3பி2சி, க.யாழரசன் 4ஏ2பி 2சி, த.தனுசன் 3ஏ3பி2சி, கு.இசையமுதன் 3ஏபி3சி, பு.வினுசிகா 3ஏபி2சிஎஸ்.

**முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி**

ரி.அபிசாந் 8ஏபி, பி.பிரணவி 8ஏசி, எஸ்.அனுரா 7ஏ2பி, ஆர்.அர்ச்சகா 7ஏ2சி, ஏ.ஆரண்யா 7ஏபிசி, வி.துபக்சிகா 7ஏபிசி, வி.லாவண்யா 7ஏபிஎஸ், ஜெ.சதுர்சன் 7ஏ2சி, ஆர்.கபிர்ந்துர்சா 6ஏ2பிஎஸ், வை.யஸ்மிகா 6ஏ2பிசி, கே.கௌதமன் 5ஏ2பிசிஎஸ், ரி.கிசானா 5ஏ2பிசிஎஸ், வித்தியாயினி 5ஏ2சி2எஸ்.

**ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்**

சி.கம்சாயினி 8ஏசி, ச.மதுசன் 8ஏசி, த.சுயந்தினி 7ஏபி, ற.யாழினி 7ஏபி,. ற. இளங்கீரன் 6ஏபிசி, ர.கஜலக்சன் 6ஏபி2சி,

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

செ.வைஸ்ணவி 8ஏசி, சு.றுபேஸ்கீர்த் தனன் 7ஏபிஎஸ், எஸ்.துசாங்கன் 7ஏபிசி, ஆர்.விதுசா 7ஏ2எஸ்

**யாழ்.மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்**

சருலக்சன் 8ஏசி, கஜீபன் 7ஏசிஎஸ், பவிந்தினி 6ஏ2பிஎஸ், மதீஸ் 3ஏ2சி3எஸ்,

**முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம்**

ப.சாரங்கன் 8ஏபி, ந.லினுசா 8ஏபி.

**முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயம்**

ரி.சுபாங்கினி 8ஏபி.

**யாழ்.மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்**

பா.சோபனா 7ஏபி, வ.யனுசன் 5ஏ பி3சி, ஸ்ரீ.டினு சன் 3ஏபி3சி2எஸ்,

**அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**

சி.வர்சிகா 7ஏபிசி, சி.ஜெதுர்சன் 7ஏ பிசி, இ. இளம்குமரன் 6ஏபிசி, த.பிரதீபன் 8ஏபிசிஎஸ், செ. ஜெதின்ராஜ் 6ஏ3பி, ஏ.கௌனிகன் 6ஏபிசி, பா. கஜானா 6ஏ சிஎஸ்.

**கனகராஜான் குளம் மகா வித்தியாலயம்**

பி.கரன்சிகா 6ஏ2பிசி

**யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

பிரதா 7ஏபிசி, யதுசா 5ஏ3பிசி,

**கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்**

ர.திவ்யா 4ஏ2பி2சிஎஸ், வே.கீர்திகா 4ஏபி3சிஎஸ்.

**உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்**

எஸ்.அனிஸ்ரன் 3ஏ2சி4எஸ்,


**கிளிநொச்சி மத்திய கல்லூரி**

ந.சாரளன் 8ஏசி, நா.கிசோதரன் 8ஏ எஸ்,

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

சி.தர்சிகன் 9ஏ, த.மதுறன் 9ஏ, அ. திருக்குமரன் 9ஏ ஏ.பவதாரணி8ஏபி செ. அருந்துசன் 8ஏசி, நிதுசன் 8ஏசி, க.சானு சன், 7ஏபிசி, பா.சஜிந்தா 7ஏபிசி, தீமயந்தி 7ஏபி, பிரசன்யா 7ஏ2எஸ், ரிலுக்சனா 7ஏ2எஸ், ல.கஜலவன் 6ஏ2பிசி, ரிசியா 6ஏ2பிசி, அனுசியா 6ஏ2பிசி, கெ.தேனுகா 6ஏ2பிசி, த.தனுசாந்தன் 6ஏபிசிஎஸ். (66,17)

## புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் 9ஏ சித்திகள் பெற்ற மாணவர்கள்



சின்ராசா தர்சிகன் | தசிகரன் மதுறன் | அமிர்தலிங்கம் திருக்குமரன்

# வேலணை வங்களாவடியில் 7 கடைகளில் கொள்ளை



வேலணை வங்களாவடிச் சந்தியில் நேற்று முன்தினம் ஏழு கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளையில் வியாபாரம் முடிந்த நிலையில் பூட்டப்பட்டிருந்த ஏழு கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுச் சம்பவத்தின் போது கடையில் இருந்த தொலைபேசிக்குப் பயன்படுத்தப்படும் அட்டைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.


வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள ரி.எஸ். என்ரப்பிறைஸ் எனும் கடையில் புகுந்த திருடர்கள் 25 தொலைபேசி மீளநிரப்பு அட்டைகள் மற்றும் 2000 ரூபா பணம் என்பனவற்றையும், அருகில் உள்ள ஜீவா உணவகத்திற்கும் சென்று கைத்தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளையும் எடுத்துள்ளனர்.

அதனைத்தொடர்ந்து விதுசன் உணவகம், ஆஞ்சநேயர் பலசரக்குக்கடை, பாற்சாலை, துவாரகன் பான்சி ஹவுஸ், பலசரக்குக் கடை என்பன உடைக்கப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவத்தினை அடுத்து கடை உரிமையாளர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை சம்பவ இடத்திற்கு மோப்ப நாய்கள் சகிதம் வருகைதந்த பொலிஸார் திருட்டுச் சம்பவத்துடன் ஈடுபட்ட நபரின் மேலங்கி ஒன்றினையும், இத்திருட்டின் போது பயன்படுத்திய டோச்லைற் ஒன்றினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றிய பொருட்களைக் கொண்டு திருட்டுடன் சம்பந்தப்பட்டவர்களை விரைவில் கைது செய்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக வேலணை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (05, 21)



வேலணை துறையூர் ஐயனார் ஆலய வருடாந்த உற்சவத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 4 ஆம் நாள் திருவிழாவில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலை பீட மாணவர்களினது கர்நாடக சங்கீத இசைக்கச்சேரி இடம்பெற்றபோது. (21)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | செவ்வாய்க்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப்பாடல்கள்) |
| Am 07.00 | காலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time (Live) |
| Am 09.58 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | தெரிந்தால் சொல்லுங்கள் |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | அதிர்வுகள் |
| PM 12.30 | அதிர்வுகள் |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# நகரின் அபிவிருத்தி முன்னேற்றம் போக்குவரத்தில் தங்கியுள்ளது

## முல்லை.நகர அபிவிருத்திக் குழுத்தலைவர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரின் அபிவிருத்தி போக்குவரத்தில்தான் தங்கியுள்ளது என முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழுத்தலைவர் செல்லத்துரை உதயகுமார் தெரிவித்தார். முல்லைத்தீவு நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நகரஅபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவில் எதிர்பார்த்த அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை. நடைபெற்ற வேலைகளும் பயனற்றவையாகவுள்ளன. அமைக்கப்பட்ட கட்டடங்களும் பயனற்றவையாகவுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு நகர அபிவிருத்திக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு சரியானமுறையில் இயங்கவேண்டுமென்பதனை கருத்தில்கொண்டவர்களே என்னைத் தலைவராகத் தெரிவு செய்துள்ளனர்.

முல்லைத்தீவினை அழகானதொரு நகரமாக உருவாக்குவதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகவுள்ளது. துறைசார்ந்தவர்களை அணுகி அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று நகர அபிவிருத்திக் குழு செயற்படும். முக்கியமாக முல்லைத்தீவு நகரில் நடைபெறும் பேருந்துப்பணிகள் சிறந்த முறையில் அமையவில்லை. மக்களுக்கும் பயன் எட்டவில்லை. முல்லைத்தீவின் நகரத்திற்குள் வருகை தரும் மக்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குச் செல்வதற்கு இரண்டு கிலோ மீற்றர் தூரத்தினை ்வ்வாறு பயணிக்க வேண்டுமென்பதை சிந்திக்கவேண்டியுள்ளது. இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவிற்கான பேருந்து நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை. பொருத்தமான இடத்தில் இதனை அமைக்க வேண்டும். அமைக்கப்படவுள்ள பேருந்து நிலையம் ம்க்களுக்குப் பயனைத் தரவேண்டும். பேருந்துநிலையம், சந்தை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் என்பவற்றிற்கு மக்கள் இலகுவாகச் சென்று வரக் கூடிய போக்குவரத்து வசதி எதிர்காலத்தில் நகர அபிவிருத்தியில் முக்கியமானதாக அமையும்.

முல்லைத்தீவு நகரின் திட்டமிடப்படாத நகர அபிவிருத்திக்கு போரும் ஆழிப் பேரலையும் முக்கியமாக அமைந்தன. நகரத்தில் அமையவேண்டிய முக்கியமான கட்டடங்கள் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் நகரிற்கு கொண்டுவரமுடியாது. ஆனால் மக்கள் அவற்றிற்குச் சென்று பயன்களை பெறக்கூடிய வகையில் போக்குவரத்து வசதிகள் உருவாக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். (160)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 8 ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் பிள்ளையார் அழகிய சிவப்புக் குதிரையில் வலம் வந்து பக்தர்களுக்கு அருளாட்சி வழங்கிய போது... (48)

# அரச உத்தியோகத்தர்களுடன் பிரதமர் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் அங்கு அரச உத்தியோகத்தர்களையும் கிராம மாவட்ட அமைப்புக்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

முல்லை மாவட்டத்திலுள்ள மீண்பிடி இராணுவ ஆளுகைக்குட்பட்ட காணிகள் தொடர்பாகவும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்கள் தொடர்பாகவும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகவும் வீடமைப்பு அபிவிருத்திகள் தொழிற்சாலைகள் போன்ற விடயங்கள் இக் கலந்துரையாடலில் இடம் பெற்றதோடு நஷ்ட ஈடும் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. (40)

# மின் இணைப்பு வழங்க கோரிக்கை

வேலணை சரவணை கிழக்கு பாரதி வீதி பகுதிக்கு மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகின்ற போதும் மேற்படி பகுதிக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படாத நிலை காணப்படுவதால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர். மின் இணைப்பு வழங்கப்படுவதற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் மின்னிணைப்பு இன்னமும் வழங்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இப் பகுதியில் வசிக்கும் மாணவர்கள் மின்சாரம் இன்றி கல்வி கற்பதற்கு பெரிதும் சிரமப்படுவதாகவும் தமக்கான மின் இணைப்பினை விரைவில் வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இடதுசாரிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் என்ன செய்யப் போகிறார்கள்? 01

● கருணாகரன்

இலங்கையின் இனவாத அரசியல் மிகக் கூர்மையடைந்து சென்று கொண்டிருக்கிறது. இன முரண்பாடும் வேறுபாட்டுணர்வும் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு இனத்துக்கென்றும் இன அடையாளங்களை மையப்படுத்திக் கட்சிகளே உருவாகிவிட்டன.

முஸ்லிம்கள் தங்களுக்கென்ற தனி அடையாள முடைய கட்சிகளுக்கும் தமிழர்கள் தமிழ் அடையாளத்துடன் உள்ள கட்சிகளுக்கும் சிங்களவர்கள் சிங்கள அடையாளத்தைக் கொண்டகட்சிகளுக்கும்தான் வாக்களிக்க வேண்டும் என்ற அபிப்பிராயமும் எண்ண முமே பொதுவாக இப்பொழுதுண்டு.

இது இனரீதியாகச் சிந்திப்பதின்றி வேறென்ன? 'இனரீதியாகச் சிந்திக்காமல் வேறு எப்படிச் சிந்திக்க முடியும்?' என்று படித்தவர்களே கேட்கும் அளவுக்கு நிலைமை வளர்ந் திருக்கிறது.

இந்தப் போக்கின் வளர்ச்சி எதிர்காலத்தில் எப்படியாக அமையப்போகிறது?

முன்னேற்றத்தையும் மானுட விழுமியங்களையும் அடையாளப் பேறுகையையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைக்காக ஆதரவளிப்பதை விட்டு விட்டு. இன அபிமானத்துக்காகச் சிந்திக்கும் போக்கு நாட்டில் பாரிய நெருக்கடிகளையும் சமூகங்களுக்கிடையில் பெரும் முரண்பாட்டையுமே உண்டாக்கும்.

இதேவேளை, வெளிச்சக்திகளான இந்தியா. சீனா. அமெரிக்கா போன்ற பெரும் வல்லரசுகள் இலங்கையை தமது ஆட்டக்களமாகவும் முதலீடுகளுக்கான தளமு மாக்கியிருக்கின்றன.

ஆகவே ஒட்டு மொத்தத்தில் இந்த நிலைமைகள் எல்லாம் இலங்கையை மிகப் பாதகமான ஒரு நிலைக்கே கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் இடதுசாரிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் புத்திஜீவிகளும் என்ன செய்யப்போகிறார்கள்?

இந்த நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவது யார்?

அந்த மாற்றங்கள் எப்படியாக அமையும்?

இவையே இன்று முக்கியமான கேள்விகளாக உள்ளன.

பாரம்பரிய மிதவாதச் சக்திகளும் வலதுசாரிச் சிந்தனையாளர்களும் இந்த வல்லரசுகளுடன் இணைந்தும் நெகிழ்ந்தும் தங்கள் நலனைப் பேணிக்கொள்ளவே முயற்சிப்பர். அப்படித்தான் நடந்தும் வருகிறது.

ஆனால், இலங்கையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்போர் அப்படி இருக்க முடியாது. குறிப்பாக மாற்றுச்சிந்தனையாளர்களும் இடதுசாரிகளும் இந்த அபாய நிலையைக் குறித்து அமைதியாக இருக்க இயலாது. அப்படியென்றால், இந்த நிலைமைக்கு – இந்தப் போக்குக்கு எதிராகப் போராடுவதா? என்று யாரும் கேட்கலாம்.

ஒரு வகையில் அது போராட்டம்தான்.

ஆனால், அதன் வடிவமும் வகைமையும் மாறுதலாக இருக்கலாம். இந்தப் போக்கை எதிர்த்து மாற்றத்தை உண்டாக்கும் வகையிலான செயற்பாடு அது என்பதே இங்கே அவதானத்திற்குரியது.

தற்போது பேசப்பட்டுவரும் மாற்றம் என்பது வெறும் தலைகளின் மாற்றம் என்பதை நிகழ்ந்து கொண்டிருக்கும் விடயங்கள் உணர்த்துகின்றன.

இது எதிர்பார்க்கப்பட்டதே.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டியும் தேர்தலின் பின்பும் நடந்த மாற்றத்தை பெரும் புரட்சியாக ஊடகங்களும் பெரும்பாலானவர்களும் கொண்டாடிய காட்சி நம் மனத்திரையில் நகைச்சுவையாக ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஊடகங்களின் பொதுப்புரிதலும் பெரும்பாலானவர்களின் அரசியல் ஞானமும் அந்த அளவில்தான் உள்ளது. இதை நாம் குறையாக உணர்ந்தாலும் குற்றம்கூற முடியாது.

ஏனென்றால், அவர்களை அப்படித்தான் கல்விக் கொள்கையும் சமூக நிறுவனங்களும் அரசியற் கட்சிகளும் சிந்திக்கவும் நம்பவும் வைத்திருக்கின்றன. இதற்கமைய அல்லது இதற்குத் தோதாக அரசியல் ஆய்வாளர்களும் ஊடகவியலாளர்களும் ஒத்திசைவதால் பொது மக்கள் 'மாற்றம்' என்ற அலையில் பெரும் நம்பிக்கையில் எடுபடுகிறார்கள். பின்னர்தான் அவர்களுக்குத் தெரிகிறது, நடந்தது 'மாற்றம்' அல்ல. 'ஏ...மாற்றம்' என்று.

ஆனால், சனங்களின் பொதுப்புத்தி என்பது, எத்தகைய ஏமாற்றங்களில் இருந்தும் இழப்புகள், பின்னடைவுகளில் இருந்தும் பாடங்களை எளிதிற் படித்து விடுவதில்லை.

தமது சொந்தப் புரிதலையும் விட, சுய அனுபவத்தையும் விட அவர்களை மயக்கும் கருத்துகளின் பின்னால் செல்வதிலேயே சனங்களின் விருப்பம் கூடுதலாக உண்டு. வளர்ச்சியடைந்த நாடுகள், வளரும் நாடுகள், வளராத நாடுகள் என்ற வேறுபாடெல்லாம் இதில் கிடையாது.

இதைச் சரியாகவே புரிந்து கொண்டு தமக்கான அரசியல் ஆதாயத்தைத் தேடிக்கொண்டிருக்கின்றன அரசியற்கட்சிகள்.

இத்தகைய அரசியற் கட்சிகளுக்கு ஆதரவாகத் தொழிற்படுகின்றன ஊடகங்கள். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை. ஒன்றுக்கு ஒன்று ஆதரவாகத் தொழிலாற்றுபவை. அப்படித் தொழிற்படுவதன் மூலமாக தத்தமது நலன்களையும் ஆதாயங்களையும் பெற்றுக்கொள்பவை.

இதற்காகவே இவை இனவாதத்தைத் தூக்கிப் பிடிக்கின்றன. தமது இனத்தைப் புனிதப்படுத்தியும் அடுத்த இனத்தை மாசுபடுத்தியும் காண்பிக்கும் உபாயம் இங்கே கைக்கொள்ளப்படுகிறது.



மனமகிழ்வுடனும் முழு ஈடுபாட்டுடனும் செய்யப்படும் வேலை ஒரு அழகான அனுபவம். - பேர்ள்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## காற்றை வழகட்டும் அவசியம்!

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் ஒருசமயம் எழுதினார்: "காரில் போகிறவர்கள் 'சீற் பெல்ற்'றும், மோட்டார் சைக்கிளில் போகிறவர்கள் 'ஹெல்மெட்'டும் போடவேண்டும் என்பதை விடவும் முக்கியமானது 'தெருவில் போகிற எவராயிருந்தாலும் இன்று மூக்கிற்கு வடிகட்டி ஒன்றை மாட்டிக்கொள்ள வேண்டும்" என்று.

நம்மைச் சாகடிப்பதற்கு வேண்டியளவு நஞ்சும் தூசியும் காற்றில் நிறைந்திருப்பதைக் குறிக்கவே அவ்வாறு எழுதினார். காற்றினால் ஏற்படும் மாசால், இருதய நோய், நுரையீரல் சார்ந்த நோய்கள் ஏற்படுவது மட்டுமல்ல கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இப்போது சொல்கின்றனர்.

காற்று மாசுபடுவதைக் கட்டுக்குள் கொண்டு வராமல் இருந்தோமானால், வருங்காலத்தில் பிறக்கும் குழந்தைகள் அளவில் சிறியதாக, எடை குறைவாக இருக்கும். குறைப் பிரசவம் ஏற்படும். இத்தகைய குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சி பாதிக்கப்படும் என்றும் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள் வெளி உலகக் காற்றைச் சுவாசிப்பதன் மூலம், கருவில் உள்ள குழந்தை பாதிப்புக்குள்ளாகி, குறைப் பிரசவத்தில் குழந்தை இறக்கும் சூழல் ஏற்படுகிறது. இப் பாதிப்பினால், ஆசியாவில் மாத்திரமே ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் குழந்தைகள் இறக்கின்றன என்றும் அவர்களது ஆய்வு முடிவு ஒன்று தெரிவிக்கிறது.

வடக்கின் இன்றைய நிலைமையைப் பொறுத்தவரையில், நிலத்தின் கீழே பரவுவதாகச் சொல்லப்படும் நஞ்சின் அபாயத்திற்கு மேலதிகமாக நிலத்தின் மேலேயும் தூசியும் புகையும் ஓசோனுமாக நச்சு மண்டலத்தினுள்ளேயே இருக்கிறோம். உலகோடு ஒட்டிய நமது வளர்ச்சிக்கு நாம் கொடுக்கும் விலையாகவும் இது இருக்கிறது.

நமது வாழ்க்கைச் சக்கரம் இன்று பல்வேறு வகையான மாசுகளுக்கிடையேதான் சுழன்று கொண்டிருக்கிறது. காற்றினால் ஏற்படும் மாசும் மிகவும் கொடியதே. கோடையின் கொடுமைகளில் ஒன்றாக மேலெழுந்து பரவும் தூசியும் அச்சுறுத்துகிறது.

பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்களில் உள்ள கலப்படம், போக்குவரத்து நெரிசலின்போது வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை ஆகியவையும் காற்றில் கலந்து காற்று மண்டலம், நச்சு நிறைந்த மண்டலமாக மாறுகிறது.

இந்த காற்றிலுள்ள மாசினால் அஸ்மா, ப்ரோன்கைடிஸ், நுரையீரல் புற்றுநோய் ஆகியவை ஏற்பட வாய்ப்புள்ளது. காற்று மாசு என்பது வீட்டினுள்ளும் இருக்கிறது.

போக்குவரத்து நெரிசலில் சிக்கி, புகையைக் கக்கிக் கொண்டே செல்லும் வாகனங்களால் ஏற்படும் காற்று மாசு மிக்வும் அதிக அளவில் உள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

60 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் வாகனத்தில் இருந்து வெளியேறும் புகையின் அளவைவிட, 20 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் வாகனத்தில் இருந்து வெளியேறும் புகை பல மடங்கு அதிகமாம்.

இந்த காற்று மாசுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், டீசலில் இருந்து வெளியேறும் புகையினாலேயே அதிக பாதிப்பு. அதனால், வரையறுக்கப்பட்ட அளவீடுகளினாலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வாகன இயந்திரங்களில் உள்ள தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் டீசலின் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. அதுபோல, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும் தரமான எரிபொருளைத் தயாரிப்பதற்கு ஏற்ப தொழில்நுட்பத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாளைய சந்ததி நலமுடன் வாழ, இப்போதே காற்றில் மாசைக் குறைக்க நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டியது அவசியம்.

- ஆசிரியர்

# பெண்தலைமைத்துவ குடும்பங்கள் யாழ்.மாவட்டத்திலேயே அதிகம்

### – அமைச்சர் ரோசி தெரிவிப்பு –

(கொழும்பு)

பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாழ் மாவட்டத்தில் அதிகமாகவுள்ளதாக சிறுவர் விவகார அமைச்சர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ரோசி சேனநாயக்க, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டைக் கட்டியெழுப்புவதில் மிக ஆர்வமாக உள்ளார் எனத் தெரிவித்த அவர், கடந்த கால யுத்தம் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகாலத்தில் வடபகுதி பெண்கள், சிறுவர்கள் அதிகளவு துன்பங்களை சந்தித்திருந்தார்கள். எனினும் யுத்தம் முடிவடைந்த பின்னர் அவர்களுக்குரிய புனர்வாழ்வுப் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஆவலாகவுள்ளதாக தெரிவித்த ரோசி சேனநாயக்க,

ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து கடந்த வாரம் 100 நாள் வேலைத்திட்டத்தில் ஒரு பகுதியை செய்து முடித்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு மக்களுக்குள்ள தேவைப்பாடுகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பத்துவருடமாக சிறுமி ஒருத்தியை துஷ்பிரயோகம் செய்த மதபோதகர்

### – பொலிஸ் நிலையத்தில் முறையீடு

(வவுனியா)

தந்தையரை இழந்த நிலையில் சபை ஒன்றின் பாதுகாப்பின் கீழ் வளர்ந்த தன்னை அச்சபையின் மதபோதகர் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து துஷ்பிரயோகம் செய்து வந்தார் என்று 20 வயது யுவதி ஒருவர் செட்டி குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் குறித்த யுவதியும், யுவதியை சிறு வயதில் பராமரித்து வந்த பெண் ஒருவரும் இணைந்து இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர். இதனையடுத்து குறித்த யுவதி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த யுவதி தனது தாய், தந்தையை இழந்த நிலையில் வேறு ஒருவரின் பாதுகாப்பின் கீழ் வளர்ந்து வந்த நிலையில் அவர் தொடர்ந்து கற்பதற்காக கிறிஸ்தவ சபை ஒன்றின் பராமரிப்பு நிலையத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு அவரது 11 ஆவது வயதில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் செட்டிகுளம், துடரிக்குளம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபை ஒன்றின் மதபோதகர், பராமரிப்பு நிலையத்தில் இருந்து குறித்த யுவதியை பொறுப்பெடுத்து தனது வீட்டில் வளர்த்து வந்தார் என்றும், மதபோதகரின் மனைவி வீட்டில் இல்லாத சமயத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு குறித்த யுவதியை மிரட்டி (அப்போது 15 வயது) பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனவும், ஐந்து வருடங்களாக இவ்வாறு தொடர்ச்சியாகத் தான் துன்புறுத்தப்பட்டுவந்தார் எனவும் அந்த யுவதி தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இனங்களின் அபிவிருத்திக்கு தேசிய அரசாங்கம் வரப்பிரசாதம்

### – அமைச்சர் வேலாயுதம் தெரிவிப்பு –

தேசிய அரசாங்கம் தேசிய இன, மக்கள் தொடர்பான தீர்மானங்கள் மற்றும் தேசிய இனங்களின் அபிவிருத்தி முன்னேற்றங்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமென அமைச்சர் கே. வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த விசேட செவ்வியின் போதே பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வேலாயுதம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மேற்கொண்டு வரும் அரசியல் கலாசார மாற்றங்கள் மற்றும், மக்கள் பிரதிநிதிகளின் தெளிவான அரசியல் விஞ்ஞாபனங்களும் நாட்டின் வளர்ச்சிக்கும் நல்லாட்சிக்கும் பாரிய பங்காற்றும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ரீதியில் நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்தரக்கூடிய தீர்மானங்களை எடுப்பதற்கு கட்சிகளுக்கு இடையிலான இணக்கப்பாடு என்பது மிக முக்கியமானதொன்றெனக் குறிப்பிட்ட அவர்,

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அரசியல் ரீதியாகவும் கல்வி, புதிய உற்பத்தி ரீதியாக வும் ஆரோக்கியமிக்க தெளி வான பாதையில் பயணிப்பதே சிறந்ததென சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய அரசின் ஊடாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து விடயங்களிலும் ஒளிவுமறைவு என்பது இருக்காது வெளிப்பாட்டு தன்மையுடன் செயற்படக்கூடிய நிலைமை உருவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மகிந்த, பசிலின் பாரியார்களின் வங்கிக்கணக்குகள் முடக்கம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவின் பாரியார் புஸ்பா ராஜபக்ஷ ஆகியோர் நடத்தி வந்த, அரச சார்பற்ற நிறுவனங்களது வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றதாக ஏற்கனவே குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோட்டை நீதவானின் உத்தரவிற்கமைய இந்த வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சுமார் 150,000 அமெரிக்க டொலர்களை புஸ்பா ராஜபக்ஷ தான் நடத்தி வந்த நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஷிராந்தி ராஜபக்ஷ தமது நிறுவனத்திற்கு வங்கிக்கணக்கு ஆரம்பிப்பதற்கு போலியான தகவல்களை வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## திட்டமிடல் சேவையாளர்களின் புதிய நிர்வாகத்தெரிவு

(கொழும்பு)

இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களின் கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வின் போது இவ் ஆண்டுக்குரிய புதிய நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவு இடம் பெற்றது.

புதிய நிர்வாக தெரிவில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக காணப்பட்ட போதும் கால்நடை மற்றும் விவசாய அமைச்சின் பணிப்பாளர் சி.இராமமூர்த்தி உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் இணைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அந்த வகையில் வட மாகாணத்திற்குரிய இணைப்பாளராக தெல்லிப்பளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**நிஜ ஜனநாயகம் என்பது அமைப்புகளையும் ஜனநாயக முறையில் உருவாக்கினால்தான் கிட்டும், நிலைக்கும் என்பது ஒரு மிக எளிய பாடம். அது கிட்டும் என்று சொல்வது கூட ஒரு எதிர்பார்ப்பே அன்றி உலகில் எங்கும் சாதிக்கப்பட்டு விட்ட ஒன்றல்ல, நிறுவப்பட்டு விட்ட ஒன்றல்ல. இன்னுமே அது ஒரு இலக்காகவே உள்ளது. ஆனால் அதை எட்டிப் பிடிக்கப் பாதை என்னவென்று முனைப்போடு கற்கும் மனிதக் குழுக்கள் ஓரளவு நிலையான சமுதாயத்தைக் கட்டி நிறுத்துகின்றனர். மற்றையோர் தொடர்ந்து அழிவி ர விளிம்பிலேயே தடுமாறிக் கொண்டிருப்பர்.**

# பேட்டிகள் - சில குறிப்புகள்

**மைத்ரேயன்**

1953 இலிருந்து இயங்கி வருகிற பாரிஸ் ரிவ்யு ஒரு இலக்கியப் பத்திரிகை. இதன் முக்கியமான அம்சம், சிறப்பு என, இதில் அவ்வப்போது வெளியாகும் பேட்டிகளைச் சொல்லலாம். வேறெதற்கும் இல்லாவிடிலும் இந்தப் பேட்டிகளுக்காகவே இந்தப் பத்திரிகை நினைவில் வைத்திருக்கப்படும்.

இப்பேட்டிகளில் பெருவாரி, நன்கு தெரிந்த இலக்கிய - கர்த்தாக்களோடு நடக்கிறவை. குறிப்பிடத்தக்க அளவில் சில, இன்னும் பெரிதாகத் தெரியவராதவர்களுடனும் நடந்தவை. பாரிஸ் ரிவ்யூவிற்குப் பேட்டி கொடுத்ததால் பலரின் இலக்கிய மதிப்பு உயர்ந்திருக்கிறது. அப்படி ஒரு ஸ்தானம் இப்பத்திரிகைக்கு.

'ரிவ்யு' என்ற சொல்லைத் தம் பெயரில் கொண்ட பல பத்திரிகைகளும் பாரம்பரியமாக இலக்கிய விசாரத்தை மேற்கொள்வன என்றாலும், இக்கால ரிவ்யு பத்திரிகைகள் பொதுவாக அனைத்து சிந்தனைகளையும் எடுத்துச் சர்ச்சிக்கின்றன. அறிவியல் துறைகளின் கருத்துகள், பலவகை மாறுதல்கள் போன்றன உரைநடையில், பேசுமொழியில் விளக்கப்பட்டு சர்ச்சிக்கப்படுகின்றன.

பல சிந்தனைத் துறைகளிடையே உரையாடலும், கருத்துப் பரிமாற்றங்களும், பலவித விமர்சனங்களும், அவற்றுக்குச் சமாதானங்களும், மறுப்புகளும், மாற்றுகளும் எழுந்து மொத்த சமூகத்திற்கும் அவ்வப்போது அவசியமான அறிவுத் திரட்டு கிட்டுவதைச் சாத்தியமாக்குகின்றன.

இவற்றில் மிக வெற்றிகரமான பத்திரிகை எனக் கருதப்படும் 'லண்டன் ரிவ்யு ஒ.ஃப் புக்ஸ்' பத்திரிகை சுமார் 64,000 பிரதிகள் விற்கிறது. ஒப்பீட்டில், அதை விடப் பல பத்தாண்டுகள் முன்பிருந்தே வெளி வந்திருக்கிற 'நியுயோர்க் ரிவ்யு ஒ.ஃப் புக்ஸ்' எனப்படும் பத்திரிகை மாதமிருமுறை வெளியிடப்படுவது, சுமார் 135,000 பிரதிகள் விற்கிறதாம்.

முழுப் பத்திரிகையையும் படிப்பது என்பது கடினம். அவ்வளவு விரிந்த தளத்தில் கட்டுரைகள் அமைகின்றன. சில உண்மையிலேயே மிக அரிதான அல்லது வெகு சிலருக்கே தெரிந்திருக்கக் கூடிய விஷயங்களைப் பற்றி அமைந்திருப்பன.

இவை இரண்டுமே நெருக்கமாக, சிறு எழுத்துகளில் அச்சிடப்படும் கட்டுரைகளைக் கொண்டவை. லண்டன் ரிவ்யு ஒ.ஃப் புக்ஸ் பத்திரிகை பொதுவாக நஷ்டத்தில்தான் ஓடுகிறது என்கிறார்கள். ஆனாலும் கட்டுரையில் உள்ள மூன்று சொற்களுக்கு ஒரு பவுண்ஸ் கணக்கில் பணம் கொடுக்கிறார்களாம். பிரமாதமான அச்சமைப்பில், க்ரா.ஃ.பிக்ஸ், வண்ணமெல்லாம் கொண்டு திகழ்கிற லண்டன் ரிவ்யு எப்படித் தொடர்ந்து வெளியிடப்படுகிறது என்பது கேள்விதான். சில பெரும் தனக்காரர்களின் கருணையால் ஓடுகிறது என்பது தகவல்.

இப்படி ஊற்று பெரிதாக இல்லாத சிறு கிணற்றில் ஏன் ஆயிரக்கணக்கானோர் கூடி நீரெடுக்கிறார்கள் ஒவ்வொரு மொழியிலும், நாட்டிலும் என்பது, நாம் எத்தனை தீர யோசித்தாலும் பதில் கிட்ட முடியாத ஒரு புதிர். ஒரு வேளை மனித புத்தியின் மர்மங்களில் இதுவும் ஒன்று போல.

பயன் என்னதென்று தெரியாத விஷயங்கள் எத்தனையோ உடற்கூறில் இருப்பதாக உயிரியல் ஆய்வாளர்கள் அவ்வப்போது பேசுவார்கள், பார்த்திருக்கிறோம். அதே போல மனித அறிதல் முறைகளிலும், நாட்டங்களின் உருவமைப்பிலும் விளக்கம் தெளிவில்லாத பலவும் இருக்கின்றன போலும்.

பாரிஸ் ரிவ்யுவின் பேட்டிகள், கேள்விகளை முன்கூட்டிக் கொடுத்து, பதில்கள் எழுதி வாங்கப்பட்டவை, அல்லது முன் தயாரிப்பில்லாத உடனடி உரையாடலாகப் பதிக்கப்பட்டவை... இப்படி பலவகைப் பேட்டிகளும் உள்ளன.

பல பேட்டிகளிலும் உரையாடல் பாணியைவிட, திருத்தமான பேச்சே தென்படுகிறது. தொடர்பில்லாது உடைந்த வாக்கியங்கள், பேச்சுக்குத் தடை செய்யும் சிறு தயக்கத்தைக் காட்டும் ஒலிகள், இடைவெளிகள், முக பாவங்களால் பேசுகையில் குரலொலி இல்லா மௌனம், அறுந்த யோசனையை மறுபடி ஒன்று சேர்க்கும் முயற்சிகளால் ஏற்படும் திடீர் நிறுத்தம். எல்லாப் பேச்சுக் கணுக்களும் இணைக்கப்பட்ட, நேர்த்தியான சங்கிலித் தொடரான சிந்தனைகள், கேள்விகள், பதில்கள்.

மிகவும் முனைந்த மனோ பாவமிருந்தாலே ஒழிய இப்படித் திருத்தமான விதத்தில் யாராலும் சில மணி நேரம் பேச்சுவார்த்தை நடாத்த முடியாது. இவை வாசக வசதி கருதி நிறையச் சீரமைக்கப்பட்ட உரையாடல்கள், அல்லது தயாரித்த கேள்விகளுக்குத் தயாரிக்கப்பட்ட பதில்கள் கொண்டவை என்றுதான் முடிவு கட்ட வேண்டி இருக்கிறது.

நாம் ஒரு எழுத்தாளரைச் சந்திக்கும்போது என்ன எதிர்பார்க்கிறோம்? ஏன் அத்தனை நேரம் அதற்குச் செலவழிக்கத் தயாராக இருக்கிறோம்? புனைவுலகில் அப்படி என்னதான் பெரும் சூட்சுமம் இருக்கிறது, புனைவு எப்படி உதிக்கிறது, அதை ஒருவர் எப்படிக் கட்டமைக்கிறார், ஏன், அவருடைய அனுபவம்தான் என்ன, வாசகர்களின் ஆர்வம் என்பது அவர் வாழ்வில் என்ன பங்காற்றியுள்ளது என்பன போன்றவற்றைத் தெரிந்து கொண்டு நமக்கு என்ன கிட்டப் போகிறது?

அதுவும் நாம் ஒரு புனை வாளராக இல்லாத போது இந்த வகை உரையாடலால் என்ன பலன்? அல்லது பலன் கருதாத வெறும் கேளிக்கை நோக்கு கொண்ட விஷயமா ஒரு பேட்டி? புனைவில் இல்லாத கேளிக்கை புனைவாளரின் வாழ்வில் கிட்டி விடுமா? அல்லது ஆட்டி வைக்கப்பட்ட பொம்மைகளின் கதை சொல்லலை விட, பொம்மலாட்டக்காரரின் கதையே மேலாக இருக்கும் என்ற நம்பிக்கைதான் நம்மை உந்துகிறதா?

கேளிக்கை அல்ல, ஆனால் வெறுமனே தெரிந்து கொள்ளும் ஆர்வம், தகவல் சேகரிப்பு, எப்போது இதெல்லாம் பயன்படும் என்று தெரியாமல் சேகரிக்கும் வேலை என்று சொல்லலாம் ஆனால் பேட்டிகளில் அப்படி என்ன அசாதாரணமான தகவல் கிட்டி விடும்?

அந்தக் கேள்வி இலக்கியமே எதற்கு என்று கேட்பதன் ஒரு நீட்சிதான். ஆமாம் இலக்கியம் என்பதுதான் எதற்கு? உப்புப் புளிக்குக் கூட ஆகாத




ஒரு விஷயம், அதை எதற்குக் கட்டிக் கொண்டு மாங்கு மாங்கென்று உழைக்கிறார்கள் சிலர்? அதைப் படித்து ஜன்ம சாபல்யம் கிட்டியது போல இன்னும் சிலர் ஏன் கிளர்ந்து போகிறார்கள்?

கவனிக்கப்பட வேண்டிய விஷயம், பாரிஸ் ரிவ்யுவில் வந்த பல உலகப் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்களின் பேட்டிகள் அவ்வப்போது தொகுக்கப்பட்டு புத்தகங்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் ஏன், எப்படி எழுதுகிறோம் என்று பேசுவதைப் படிப்பதனால் இலக்கியம் படைக்க நமக்குத் தெரிந்து விடுவதில்லைத்தான். ஆனால் அப்படித் தெரிந்து கொள்வன, ஏற்கனவே ஒருவரிடம் இருக்கக் கூடிய இலக்கியப் படைப்புக்கான உந்துதலை நல்வழிப்படுத்தும் வாய்ப்பு அதிகம்.

ஆற்றுப்படுத்தல் என்பதைத் தமிழுலகும், பண்பாடும் வெகுகாலமாகவே பாராட்டி வந்திருக்கின்றன. அச்செயலைப் படைப்புக்குச் சமமானதாகவே கருதும் பண்பாடு இங்கு உண்டு.

வழிகாட்டுவோர், தம் வழி தவிர வேறெதையும் கேட்பவர் கருதவும் கூடாது, காட்டப்படும் வழி குறித்து எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது, வெறும் நம்பிக்கையைக் கொண்டு பாதை மாறாமல் செல்ல வேண்டும் என்று எப்போது கட்டளையிடத் துவங்குகிறார்களோ அப்போதே அது கொடுங்கோலாட்சிக்கு இட்டுச் சென்று விட்டது என்று கொள்ளலாம்.

நிஜ ஜனநாயகம் என்பது அமைப்புகளையும் ஜனநாயக முறையில் உருவாக்கினால்தான் கிட்டும், நிலைக்கும் என்பது ஒரு மிக எளிய பாடம். அது கிட்டும் என்று சொல்வது கூட ஒரு எதிர்பார்ப்பே அன்றி உலகில் எங்கும் சாதிக்கப்பட்டு விட்ட ஒன்றல்ல, நிறுவப்பட்டு விட்ட ஒன்றல்ல. இன்னுமே அது ஒரு இலக்காகவே உள்ளது. ஆனால் அதை எட்டிப் பிடிக்கப் பாதை என்னவென்று முனைப்போடு கற்கும் மனிதக் குழுக்கள் ஓரளவு நிலையான சமுதாயத்தைக் கட்டி நிறுத்துகின்றனர். மற்றையோர் தொடர்ந்து அழிவின் விளிம்பிலேயே தடுமாறிக்கொண்டிருப்பர்.

எவ்வளவுக்கு ஜனநாயகம் என்பது நடைமுறையில் செயற்படுத்தப்படுவது ஒரு அவசிய குணமாகப் பயிலப்படுகிறதோ அவ்வளவுக்கு சமூக அமைப்புகளுக்கு ஸ்திரத்தன்மையும், நம்பகத்தன்மையும் அடிப்படையில் கிட்டும். அவை போதுமானதா என்றால் இல்லை, ஆனால் அவசியமானவை.

உத்தமராக இருப்பது ஒன்றுதான் வாழ்க்கையின் நோக்கம் என்று நாம் கருதுவது ஒரு குறிக்கோளே அன்றி, அதைத் தவிர மற்றெல்லாம் இழிவு என்று எண்ணுவது அத்தனை நடைமுறைக் கருத்துள்ள அணுகலாகாது.

பகுத்து அறிதல் என்பது பல-வழிகளில் ஒன்று. முக்கியமான ஒன்று என்று கூடக் கொள்ளலாம், ஆனால் பகுப்பதிலும், அறிதலிலும் ஒற்றை வழிதான் எந்நேரமுமே உள்ளது என்று வாதிடுதல் வீண் பிடிவாதமேயன்றி, உருப்படும் வழி இல்லை.

நல்ல சிந்தனை என்பது நல்ல செயல்முறைக்கு இட்டுச் சென்றே தீரும் என்று ஒரு விதியும் இல்லை.

அதேபோலவே நல்ல அறிதல் என்பது நல்ல இலக்கியம் படைக்கவே செய்யும் என்றில்லை. ஆனால் நல்லிலக்கியம் படைக்க நல்ல அறிதல் அவசியம் என்பதில் ஐயமில்லை. அந்த முன் நிலை, அப்படி அறிந்திருத்தல் என்பது; நல்லிலக்கியம் படைப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்பதிலும் ஐயம் கொள்ளத் தேவை இல்லை.

இப்படி ஒரு அறிதலுக்கு இந்த பேட்டிகள் உதவலாம், உதவ வேண்டும். உதவும் என்பது பாரிஸ் ரிவ்யுவைத் துவக்கி நடத்துவோரின் எண்ணம்.

பெயர் பாரிஸ் ரிவ்யு என்றாலும் இது வெளிவருவது என்னவோ அமெரிக்காவிலிருந்துதான். அமெரிக்க எழுத்தாளர்களாலேயே உருவாக்கப்பட்ட இந்தப் பத்திரிகை, ஆங்கில இலக்கியத்திலேயே நிறைய கவனம் செலுத்துவது தவிர்க்கவியலாதது.

# குற்றவாளிகள் அரசாங்கத்திற்குள்

## முஸம்மில் குற்றச்சாட்டு

குற்றம் செய்தோர் எவரையும் அரசாங்கம் சட்டத்துக்கு முன் கொண்டு வராது என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் இன்று அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் பெற்றுள்ளனர்.

எனவே அரசாங்கம் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து இனி அக்கறை கொள்ளப்போவதில்லை என்று முஸம்மில் குறிப்பிட்டுள்ளார்.

போதைவஸ்து கடத்தல்காரர்களும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டுள்ளோரும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திலேயே இருந்த தாக அரசாங்கம் குற்றம் சுமத்தியது.

எனினும் குற்றம் சுமத்தப்பட்ட அனைவரும் அரசாங்கத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் முஸம்மில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொன்சேகாவிற்கு இணையான பதவி கிடைப்பதை தடுப்பதற்கு சதி

## முன்னாள் விமானப்படைத்தளபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இணையான, மார்ஷல் ஒவ் த எயார் பதவி, தனக்கு கிடைப்பதை தடுப்பதற்கு சதி இடம்பெறுவதாக தாம் சந்தேகிப்பதாக முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரொஷான் குணதிலக தெரிவித்துள்ளார்.

மிக் விமானக் கொள்வனவு ஊழல் விவகாரத்தில், தமது பெயரைச் சம்பந்தப்படுத்த முயறசிகள் இடம்பெறுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு தற்போதைய அரசாங்கம் பீல்ட் மாரஷல் பதவியை வழங்கியதையடுத்து, போர் வெற்றி கொள்ளப்பட்ட போது விமானப்படைத் தளபதியாக இருந்த என்னை மார்ஷல ஒவ் த எயார் பதவிக்கும், கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் வசந்த கரன்னகொடவை. அட்மிரல் ஒவ் த பிளீட் பதவிக்கும் உயர்த்த வேண்டும் என்றும் பல்வேறு மட்டங்களில் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது, திடீரென சர்ச்சைக்குரிய மிக் விமானக் கொள்வனவு விவகாரத்தில் எனது பெயரைத் தொடர்பு படுத்தி பரப்புரை செய்யப்படுகிறது.

உண்மையில் மிக்-27 போர் விமானக் கொள்வனவில் எந்த சர்ச்சையும் இல்லை.

நான் விமானப்படைத் தளபதியாக இருந்த போது, நான்கு மிக் -27 போர் விமானங்கள் உக்ரேனிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

அந்த விமானக் கொள்வனவு விமானப்படை ஒப்புதல் அளித்து இடம்பெறவில்லை. அது அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டு செய்யப்பட்ட விமானக் கொள்வனவாகும்.



2006ஆம் ஆண்டில் இருந்தே மிக் போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இருந்தது. ஆனால், நான் பதவியேற்ற பின்னரே அந்தக் கொள்வனவு இடம்பெற்றது.

போர் விமானங்களை ஒரு பொருளை கடையில் போய் வாங்குவது போல கொள்வனவு செய்ய முடியாது. எமக்கு அமைச்சரவை அனுமதி அவசியம். அமைச்சரவையின் ஒப்புதல் எமக்கு அளிக்கப்பட்டது.

அண்மையில் இதுகுறித்து பொலிஸ் பிரிவின் சிறப்பு நிதி மோசடித்தடுப்பு பிரிவு அதிகாரிகள் என்னிடம் விசாரித்தனர்.

அப்போது விமானப்படைத் தளபதி என்ற வகையில், நான வாக்குமூலம் அளித்தேன். என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசாங்கத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கும் எதிர்க்கட்சித்தலைவர் தேவையில்லை

## என்கிறார் முன்னாள் அமைச்சர் சந்திரசேன



அரசாங்கத்திற்கு கீழ்படிந்து நடந்து கொள்ளும் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் தேவையில்லை என முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்துடன் இணைந்து அரசாங்கத்தின் கீழ்ப்படிவுள்ள ஓர் சேவகனாக செயற்பட்டால் அவ்வாறான ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்க முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா எனது நல்ல நண்பர், அரசாங்கத்திற்கு கீழ்படிந்து செயற்படுவதிலிருந்து விடுபட்டு செயற்பட்டால் முழு அளவில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவேன். மெய்யான எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டால் நான் உள்ளிட்ட நாடாளுமன்றின் பெரும்பான்மையானவர்கள் ஆதரவளிப்பார்கள். மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக போட்டியிடச் செய்ய முயற்சிக்கப்படுகின்றது. இதற்கான கூட்டங்களில் நாம் பங்கேற்காவிட்டால் மக்கள் எம்மை நிராகரித்து விடுவார்கள். இதன் காரணமாகவே நாம் இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றோம்.

கட்சியை இரண்டாக பிளவடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சுதந்திரக் கட்சியின் 28 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்தினபுரிக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சுதந்திரக் கட்சியின் ஓர் ஆலோசகராவார் அவரை பிரதமர் வேட்பாளராக நியமிக்குமாறு மக்களும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கோரி வருகின்றனர். தற்போதைய அரசாங்கம் எனக்கு பிரதமர் பதவி வழங்கினாலும் ஆளும் கட்சியுடன் இணைந்து கொள்ள மாட்டேன் என எஸ்.எம் சந்திரசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# செனுகாவின் தூதுவர் நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

தாய்லாந்திற்கான தூதுவராக நியமிக்கப்பட்ட செனுகா செனவிரட்னவின் நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

உயர் பதவிகள் தொடர்பிலான நாடாளுமன்றக் குழுவிடம் முன்னிலையாக வேண்டியிருப்பதனால் இந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தற்காலிக அடிப்படையில் இந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்திற்கான தூதுவராக செனுகாவை நியமிப்பதா இல்லையா என்னும் தீர்மானம் இந்த நாடாளுமன்றக்குழுவின் தீர்மானத்திற்கு அமையவே மேற்கொள்ளப்பட உள்ளது.

செனுகாவின் நியமனம் குறித்து நாடாளுமன்றக்குழு தீர்மானம் எதனையும் இதுவரையில் எடுக்கவில்லை.

எதிர்வரும் கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட உள்ளது.

உயர் பதவியொன்றுக்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அல்லது பரிந்துரை செய்யப்பட்ட நியமனங்கள் தொடர்பில் ஆராய்ந்து அது குறித்த இறுதிப் பரிந்துரைகளை உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக்குழு முன்வைக்கும்.

ஜெனீவாவிற்கான நிரந்தரப் பிரதிநிதியாக கடமையாற்றிய காலத்தில் செனுகா ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் நியமனம் ஒத்தி வைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



செனுகா நியமிக்கப்பட்டதற்கு ஜே.வி.பி. உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெடுஞ்சாலை அபிவிருத்தி சீன நிறுவனங்களுக்கு அனுமதி



சீனாவுடன் இணைந்து வீதி அபிவிருத்தித் திட்டங்களை மீளவும் ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக, அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார்.

நெடுஞ்சாலைகள்; உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலரான, உதய ரஞ்சித் செனிவிரத்ன, இது குறித்து சீன செய்தி நிறுவனமான சின்ஹுவாவிடம், இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தத்திட்டங்கள் தொடர்பாக சீன ஒப்பந்தகாரர்களுக்கு அமைசசினால் ஏற்கனவே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில திட்டங்களை சீன நிறுவனங்கள், இடைநிறுத்த முன்னதாக தீர்மானித்திருந்தன.

எனினும், அவற்றில் ஒன்றாக, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கப் பணியை உடனடியாக மீள் ஆரம்பிக்க வேண்டும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

சீன நிறுவனங்களுக்கு நாம் கடந்தவாரம் ஒரு பில்லியன் ரூபாவை கொடுத்து விட்டோம். எனவே அவர்கள் எந்த தொந்தரவும் இன்றி வேலையைத் தொடரமுடியும்.

இந்த வீதி அபிவிருத்தித் திட்டங்களை சீனாவுடன் இணைந்து மேற்கொள்வதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

பணிகளை விரைவாக ஆரம்பிக்கும்படி நாம் சீன நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளோம். அவர்களால் விரைவில் பணிகளை முடிக்க முடியும்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், இந்தத் திட்டங்களை சீன நிறுவனங்களே தொடர்ந்து மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தில் ரஷ்ய கடற்படைக் கப்பல்கள்



ரஷ்யக் கடற்படையின் பசுபிக் கப்பல் படைப்பிரிவைச் சேர்ந்த மூன்று போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன. அட்மிரல் பன்ரெலீவ், பெசெங்கா, எஸ்.பி.522 ஆகிய கப்பல்களே, கடந்த 28ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

மாலுமிகள் ஓய்வெடுப்பதற்காகவும், விநியோகத் தேவைகளுக்காகவுமே, இவை கொழும்பு வந்துள்ளதாக, இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல்கள் நாளை வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, திருகோணமலைத் துறைமுகத்தில் இந்தியக் கடற்படையின் நான்கு கப்பல்கள் தரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சித் தலைவராக வழங்கிய உறுதிமொழியை பிரதமராக உள்ள போது நிறைவேற்றுங்கள்

## பரவிப்பாஞ்சான் மக்கள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

பிரதமர் ரணில் விக்கிரசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பரவிப்பாஞ்சான் காணி விடயத்தில் வழங்கிய உறுதி மொழியை தற்போது அதிகாரம் மிக்க பிரதமராக உள்ள போது நிறைவேற்றித் தாருங்கள் என கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்கள் பிரதமரிடம் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மீள்குடியேற்றம், பெண்கள் தலைமைதாங்கும குடும்பங்களின் அபிவிருத்தி, புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கு செயற்றிட்டம், மற்றும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயு் கூட்டத்தின் போதே பரவ் பாஞ்சான் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஐந்து வருடங்களை கடந்து விட்ட நிலையிலும் கிளிநொச்சி நகரை அண்டிய பரவிப்பாஞ்சான் மக்களாகிய நாங்கள் இன்றும் அகதியாகவே சொந்த ஊரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றோம் எனவே எங்களின் வேதனைகளை புரிந்து கொண்டு எங்களை எங்கள் சொந்த இடங்களில் விரைவாக மீள்குடியேற்றுங்கள். பரவிப்பாஞ்சான் கிராமத்தில் உள்ள காணிகள அனுமதிப் பத்திரக் காணிகள் அல்ல அது உறுதிக் காணிகள் எங்களிடம் உறுதிகள் உண்டு எனத் தெரிவித்த மக்கள் ரணில் விக்கிரசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பரவிப்பாஞ்சான் மக்களின் காணிகள் அவர்களிடம் வழங்கப்படவேண்டும என எங்களிடம் உறுதியளித்திருந்தார். ஆனால் தற்போது அதிகாரமிக்க பிரதமராக காணப்படுகின்றார் எனவே அன்று வழங்கிய உறுதிமொழியை இன்று நிறைவேற்றித் தாருங்கள் என மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்தனர். இதன் போது பிரதமர் அமைதியாகவே இருந்து விட்டார் என்பது குறிப்பிடத் தககது. (29)

# ஐ.தே.க.வின் அலுவலகம் முல்லையில் திறப்பு

முல்லைத்தீவில் ஐக்கியதேசியக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் இந்திரன் சஜீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளருமான உனைஸ் பாரூக், அமைச்சர் சுவாமிநாதன், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒட்டுசுட்டான் பிரதேச அமைப்பாளர் முத்துசாமி முகுந்தகஜன், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.(160)

# கொக்குளாயில் பாலம் அமைப்பதன் மூலம் திருமலை - முல்லையை இணைக்கமுடியும்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குளாயில் ஒரு கிலோமீற்றருக்கான பாலமொன்றினை அமைப்பதன் மூலம் திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்குமான இணைப்பினை உருவாக்கமுடியுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முல்லைத்தீவு மக்கள் நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொக்குளாயிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு உவர் நீர் பரந்து காணப்படுகின்றது. இப்பகுதியில் பாலம் அமைப்பதன் மூலம் முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கான போக்குவரத்து இலகுபடுத்தப்படும். தற்போது முல்லைத்தீவு நகரிலிருந்து வெலிஓயா வழியாக திருகோணமலைக்கு 140 கிலோமீற்றர் தூரம் பேருந்துகள் பயணிக்கவேண்டியுள்ளது.

கொக்குளாயில் பாலம் அமைக்கப்படுமானால் 105 கிலோமீற்றர் தூரம் வழியாக முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கு பேருந்துகள் பயணிக்கமுடியும் எனவும் பிரதமரிடம் முல்லைத்தீவு ம்க்கள் தெரிவித்துள்ளனர். கொக்குளாயில் பாலம் அமைப்பதுடன் வட்டுவாகல் பாலத்தினையும் புனரமைத்துத்தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (160)

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்துக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்



வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் வசித்துவரும் இறுதிக்கட்டப் போரினால் அவையங்களை இழந்துள்ள, கடும் காயமுற்றுள்ள போராளிகள் பொதுமக்களுக்கு பிரான்ஸில் வசித்துவரும் திரு. திருமதி தேவமனோகரன் தம்பதிகளின் புத்திரன் பிரவீனின் 15 ஆவது அக வையை முன்னிட்டு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

ரி.ஆர்.ரி.வானொலியின் ஏற்பாட்டில், "இணையும் கரங்கள்" அமைப்பின் தலைவர் வீரசிங்கம் சசிகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டு நூறு குடும்பங்களுக்கு உணவுப்பொருட்களை வழங்கி வைத்தார்.

உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் அவர் உரையாற்றும் போது,

யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு வருடங்களை கடந்துள்ள போதிலும்கூட, போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தமது நாளாந்த வாழ்வாதார தேவைகளுக்காகவும், மருத்துவ வசதிகளுக்காக வும் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 540 பேர் அவயவங்களை இழந்தும், கடும் காயமுற்றும் மாற்றுத்திறனாளிகளாக உள்ளனர். இவர்களில் 160 பேர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

வடக்கு கிழக்கிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்துக்கு நிரந்தர தீர்வைக்காண, புதிய அரசு விசேட செயலணியை உருவாக்கி, அதன் ஊடாக முழுமையான தகவல் திரட்டுகளை மேற்கொண்டு, மாதாந்த உதவித்தொகையும், வாழ்வாதாரத்துக்கான நிரந்தர உதவியும், மருத்துவ உதவிகளையும் வழங்கும் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

15 ஆவது அகவையை எய்தும் தேவமனோ கரன் தம்பதிகளின் புத்திரன் பிரவீனுக்கு "இணையும் கரங்கள்" அமைப்பினர் தமது பிறந்தநாள் வாழ்த்துக்களையும், தேவ மனோகரன் குடும்பத்தினருக்கு தமது உளம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்தனர். (70)

# பிரம்மோற்சவத்தை முன்னிட்டு போட்டிகள் நடாத்த ஏற்பாடு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் பிரம்மோற்சவத்தை முன்னிட்டு சமய அறிவு, நாவன்மை, பண்ணிசைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதில் சமய அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழ மையும் பேச்சு மற்றும் நாவன்மைப் போட்டிகள் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப்போட்டிகள் 5 பிரிவுகளாக இடம்பெறவுள்ளன.

தரம் 1,2,3 மாணவர்கள் ஆரம்பபிரிவாகவும், தரம் 4,5 மாணவர்கள் கீழ்ப்பிரிவாகவும், தரம் 6,7,8 மாணவர்கள் மத்திய பிரிவாகவும், தரம் 9,10,11 மாணவர்கள் மேற்பிரிவாகவும், தரம் 12,13 மாணவர்கள் அதிமேற்பிரிவாகவும் போட்டிகளில் பங்கு பெறமுடியும்.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் விநாயகர் என்னும் தலைப்பிலும், கீழ்ப்பிரிவு மாணவர்கள் விநாயகர் வழிபாடு என்னும் தலைப்பில் 3 நிமிடங்களும், மத்தியபிரிவு மாணவர்கள் சமகாலத்தில் இந்து சமய வளர்ச்சி என்னும் தலைப்பில் 4 நிமிடங்களும், மேற்பிரிவு மாணவர்கள் சைவ சமயம் காட்டும் வாழ்க்கை என்னும் தலைப்பில் 6 நிமிடங்களும், அதிமேற்பிரிவு மாணவர்கள் பெரியபுராணம் என்னும் தலைப்பில் 7 நிமிடங்களும் தங்கள் நாவன்மையினை வெளிப்படுத்த வேண்டும்.

சமய அறிவுப் போட்டியானது பாடப்பரப்பு, சமய அறிவு, மருதடி விநாயகர் ஆலய வரலாறு சம்பந்தமாக அமையவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் பெறுமதியான பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சைக் கரும பீடத்திலோ அல்லது 0771641413 என்னும் இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்று 2 ஆம் திகதி வியாழக் கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (48)

## முரசின் இன்றைய பலன்

(31.03.2015 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 17 ஆம் திகதி.

ஏகாதசி - திதி. சித்தம் - யோகம்.

யோகர் சுவாமி குருபூசை. ஆயிலிய நட்சத்திரம் பி.பகல் 01.57 வரை.

இராகு காலம 03.12 - 04.42 வரை. சுபநேரம 10.42 - 12.12 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** - 'லீசிங்' வாகனம் கொள்வனவு செய்வதை மனையாள் தடுத்து விடல்.

**ரிஷபம்** - வங்கித் தொடர்பு அறுந்துவிடலாம் என்ற பதகளிப்பு ஏற்படல்.

**மிதுனம்** - நோய் காரணமாக இளைப்பார எண்ணம் தக்கவைத்தல்.

**கடகம்** - வியாபாரப் போட்டியினால் வாக்குக்கவனம் ஏற்படல்.

**சிம்மம்** - மின் ஒழுக்கில் கவனம் எடுத்தமையினால் சேதம் ஏற்படும் நிலை அற்றுப்போதல்.

**கன்னி** - தற்காலிகப்பணி நிரந்தரமாக்கப்படும் நம்பிக்கை பிறத்தல்.

**துலாம்** - இடமாற்றம் ஏற்படலாமென்ற அச்சம், பதகளிப்பு தக்கவைத்தல்.

**விருச்சிகம்** - உரிய வேளை மனைக்கு வந்ததால் திருடர் தொல்லை அற்று விடல்.

**தனுசு** - மருமகர் மாமன் உறவில் நிலவிய சர்ச்சை தணிந்து விடல்.

**மகரம்** - பயணத்திற்கான ஏற்பாட்டில் தடங்கலாக இறங்குதல்.

**கும்பம்** - மன அமைதியின் பொருட்டு குடும்ப சகிதம் சுற்றுலா செல்ல திட்டமிடல்.

**மீனம்** - கைகூடி வரலாம் என நினைத்த செயல் இழுபடுவதைக் கண்டு நம்பிக்கையிழக்கும் நிலைப்பாடு ஏற்படல்.

# சாதனைகள் நிறைந்த உலகக்கிண்ணம் 2015

எந்த உலகக்கிண்ண போட்டிகளிலும் இல்லாத அளவுக்கு நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண போட்டிகளில் அதிகளவான சாதனைகள் நிகழ்த்தப்பட்டு உள்ளன. அதன் விபரம்




முதல்முறையாக இந்த உலக போட்டியில்தான் இரட்டைச் சதம் அடிக்கப்பட்டது. அதுவும் 2 முறை எடுக்கப்பட்டுள்ளது. சிம்பாப்வேக்கு எதிராக மேற்கிந்திய வீரர் கெய்ல் 215 ரன் குவித்தார். இதில் குறைந்த பந்தில் இரட்டைச்சதம் எடுத்து சாதனை புரிந்தார்.

அதைத்தொடர்ந்து நியூசிலாந்து வீரர் குப்தில் மேற்கிந்திய அணிக்கு எதிராக 237 ரன் குவித்தார். இதுவே உலக கோப்பையில் சாதனையாக உள்ளது. 1996 ஆம் ஆண்டு ஐக்கிய அரபுஎமிரேட்சுக்கு எதிராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கிரிஸ்டன் 188 ரன் எடுத்ததே சாதனையாக இருந்தது. 19 ஆண்டு கால சாதனை முறியடிக்கப்பட்டது.

இலங்கை இதன்மூலம் சங்கக்கார தொடர்ந்து 4 சதம் அடித்து ஒருநாள் போட்டி வரலாற்றில் புதிய சாதனை படைத்தார். அவர் வங்காளதேசத்துக்கு எதிராக 105 ரன்னும், இங்கிலாந்துக்கு எதிராக 117 ரன்னும், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 104 ரன்னும், ஸ்கொட்லாந்துக்கு எதிராக 124 ரன்னும் தொடர்ந்து எடுத்து முத்திரை பதித்தார். வேறு எந்த ஒரு வீரரும் தொடர்ந்து 4 சதம் அடித்தது கிடையாது.

மேலும் சங்கக்கார விக்கெட் கீப்பிலும் புதிய சாதனை படைத்தார். பிடிஎடுப்பு மற்றும் ஸ்டம்பிங் மூலம் 54 பேர் அவுட் ஆக காரணமாக இருந்தார். இதன் மூலம் கில்கிறிஸ்ட் சாதனையை (52) அவர் முறியடித்தார்.

எந்த உலக கோப்பையிலும் இல்லாத அளவுக்கு 38 சதங்கள் அடிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் யாரும் சதம் அடிக்கவில்லை.

மேற்கிந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா கப்டன் டிவில்லியர்ஸ் 64 பந்தில் 150 ரன்னை எடுத்து புதிய உலக சாதனை படைத்தார். ஏற்கனவே குறைந்த பந்தில் அரைச்சதம், சதம் அடித்த சாதனை வீரராக அவர் திகழ்ந்தார்.

கிறிஸ்கெய்ல் சாமுவேல்ஸ் ஜோடி சிம்பாப்வேக்கு எதிராக 2ஆவது விக்கெட்டுக்கு 373 ரன் குவித்து சாதனை படைத்தது. ஒரு நாள் போட்டி வரலாற்றில் எந்த ஒரு ஜோடியும் இவ்வளவு அதிகமான ரன்னை எடுத்தது இல்லை.

இதேபோல தென்னாபிரிக்காவின் மில்லர் டுமினி ஜோடி 5ஆவது விக்கெட்டுக்கும், ஐக்கிய அரபு எமிரேட்சின் சைமான் அன்வர்- ஜாவித் ஜோடி 7ஆவது விக்கெட்டுக்கு உலக கோப்பையில் சாதனை படைத்தது.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அவுஸ்ரேலியா 6 விக்கெட் இழப்புக்கு 417 ரன் குவித்து சாதனை படைத்தது. இந்தியாவின் உலக கோப்பையை சாதனை (413 ரன்) முறியடிக்கப்பட்டது.

இந்த உலக கோப்பையில் 3 முறை 400 ரன்னுக்கு மேல் குவிக்கப்பட்டது. தென்னாபிரிக்க அணி அயர்லாந்துக்கு எதிராக 411 ரன்னும், மேற்கிந்திய அணிக்கு எதிராக 408 ரன்னும் குவித்தது.

350 ரன்னில் இருந்து 400 ரன்னுக்கு மேல் 7 முறை எடுக்கப்பட்டது சாதனையாகும். ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அவுஸ் ரேலியா 275 ரன்னில் வெற்றி பெற்றது. இதன் முலம் இந்தியாவின் உலக கோப்பை சாதனை (257 ரன்னில் பெர் மூடாவை வீழ்த்தி இருந்தது) முறியடிக்கப்பட்டது.

இதேபோல இந்த உலக கோப்பையில் தென்னாபிரிக்காவும் 257 ரன்னில் மேற்கிந்திய அணி வீழ்த்தி இருந்தது.

அவுஸ்ரேலியா இலங்கை அணிகள் மோதிய ஆட்டத்தில் மொத்தம் 688 ரன் குவிக்கப்பட்டது. இது சாதனையாகும். கடந்த உலக கோப்பையில் இந்தியா, இலங்கை மோதிய ஆட்டத்தில் மொத்தம் 676 ரன் குவிக்கப்பட்டதே சாதனையாக இருந்தது.

துடுப்பாட்ட ஸ்ரைட் ரேட் இந்த உலக கோப்பையில்தான் அதிகமாக இருந்தது.

28 முறை 4 விக்கெட்டுக்கு மேல் கைப்பற்றப்பட்டது. இங்கிலாந்து வேகப்பந்து வீரர் ஸ்டீவ்பின், தென்னாபிரிக்க சுழற்பந்து வீரர் டுமினி ஆகியோர் ஹட்ரிக் சாதனை புரிந்தனர்.

இந்த உலக கோப்பையில் இந்திய அணி தொடர்ந்து 7 முறை எதிர் அணியை முழுமையாக ஆட்டமிழப்பு செய்து சாதனை படைத்தது.

70 விக்கெட்டுகளில் உமேஷ் யாதவ் அதிகமாக 18 விக்கெட் கைப்பற்றினார். அவருக்கு அடுத்தபடியாக முகமது ஷமிக்கு 17 விக்கெட் கிடைத்தது. ரசிகர்களின் ஆதரவுஇந்த உலக கோப்பையில் அமோகமாக இருந்தது மைதானத்தில் சென்று பார்த்த ரசிகர்களின் எண்ணிக்கையும் தொலைக்காட்சியில் நேரில் பார்த்தவர்களில் எண்ணிக்கையில் சாதனை நிகழ்த்தப்பட்டது.

இந்த உலக கோப்பையில் பெரும்பாலான ஆட்டங்களில் மிகுந்த பரபரப்பு, விறுவிறுப்பு இல்லாமல் இருந்தது. ஒரு பக்க ஆட்டமாகவே அமைந்தது.

இறுதிப் போட்டி, இந்தியா அவுஸ்ரேலியா அரை இறுதி, 4 கால் இறுதி மற்றும் பெரும்பாலான ஆட்டங்களில் சுவாரசியம் இல்லாமல் ஒரு பகுதி ஆட்டமாகவே இருந்தது.

தென்னாபிரிக்கா நியூசிலாந்து மோதிய அரை இறுதி, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மோதிய லீக் ஆட்டம், ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, சிம்பாப்வே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆட்டங்கள் மிகவும் பரபரப்பாக இருந்தன.

# சாதனை வீரர்கள்



உலகக்கிண்ணத்தை வென்று அவுஸ்ரேலிய அணி ஐந்தாவது தடவையாக சம்பியனாகியுள்ளது.

இந்நிலையில் இந்த சுற்றுத்தொடரில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளது.

இதன்படி அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள்:-

இந்த உலகக்கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில், நியூசிலாந்தின் குப்டில் (9 போட்டி, 547 ஓட்டங்கள்) முதலிடம் பெற்றார்.

இலங்கையின் குமார் சங்கக்கார (7 போட்டி, 541 ஓட்டங்கள்) இரண்டாமிடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்காவின் டிவிலியர்ஸ் (8 போட்டி, 482 ஓட்டங்கள்) மூன்றாமிடத்தில் உள்ளார்.

சிம்பாப்வேயின் பிரண்டன் டெய்லர்(6 போட்டி, 433 ஓட்டங்கள்) நான்காமிடத்தில் உள்ளார்

இந்திய அணியின் தவான் (8 போட்டி, 412 ஓட்டங்கள்) ஐந்தாமிடத்தில் உள்ளார்.

அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள்:-

அவுஸ்ரேலிய வீரர் மிட் செல்ஸ்டார்க் முதலிடத்தில் (8 போட்டி, 22) உள்ளார்.

நியூசிலாந்தின் போல்ட் 22 விக்கெட் வீழ்த்தியபோதும், விட்டுக்கொடுத்த ஓட்டங்கள் அடிப்படையில் இரண்டாவது இடம் பிடித்தார்.

இந்தியாவின் உமேஷ் (8 போட்டி, 18), ஷமி (7 போட்டி, 17) ஆகியோர் மூன்றாவது, நானகாவது இடங்கள் பிடித்தனர்.

ஐந்தாவது இடத்தில் தென் ஆபிரிக்காவின் மோர்னி மோர்கல் (8 போட்டி, 17) உள்ளார.

## 2019 உலகக் கிண்ண போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெறும்

2019ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தப் போட்டிகள் 2019ஆம் ஆண்டு மே 30ஆம் திகதி முதல் யூலை 15ஆம் திகதி வரை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்சில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் 10 அணிகள் மட்டுமே பங்கேற்கும். 8 அணிகள் நேரடியாகவும், 2 அணிகள் தகுதிச் சுற்று மூலமாகவும் தெரிவாகும்.

போட்டியின் விறுவிறுப்பை அதிகரிக்கும் வகையில் அணிகளின் எண்ணிக்கையை 14 இல் இருந்து 10 ஆகக் குறைக்க எடுத்த முடிவு சரியானதே என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## ஆஸி.வீரர்களால் பலருக்கு அதிருப்தி

நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ண போட்டியின் போது அரைச்சதமடித்த பின்னர் ஆட்டமிழந்த எலியட்டை அவுஸ்ரேலிய வீரர்கள் நடாத்திய விதம் பலரின் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணி வீரர்கள் தோல்வியடைந்த பின்னர் ஸ்டெய்ன் நிலத்தில் வீழ்ந்திருந்த போது கை கொடுத்து எழ வைத்தார்எலியட். இத்தகைய மனிதாபிமானம் மிக்க எலியட் ஆட்டமிழந்த போது அவுஸ்ரேலிய அணி வீரர்கள் நடந்து கொண்ட விதம் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

## உலகக் கிண்ணத்தை வெல்ல பந்துவீச்சாளர்களே காரணம்

## கிளார்க் புகழாரம்



பந்துவீச்சாளர்களாலேயே உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டதாக அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது

மிகப்பெரிய போட்டிகளில் அவுஸ்ரேலியா எப்போதுமே சிறப்பாகவே விளையாடும். இது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. பந்து வீச்சாளர்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. அவர்களால்தான் உலகக் கோப்பையை வென்றோம. இதில் எந்த சந்தேகமும் இல்லை.

தொடர் நாயகன் விருதுக்கு ஸ்டார்க் தகுதியானவர். எங்களது பந்து வீச்சு தாக்குதல் பலம் வாய்ந்து காணப்பட்டது. சொந்த மண்ணில் உலகக் கோப்பையை வென்றது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இரண்டு சிறந்த அணிகளே இறுதிப்போட்டியில் மோதின. இறுதிப் போட்டி தினம் எங்களுடையதாகி விட்டது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நியூசிலாந்து கப்டன் மக்கலம் கூறியதாவது,

ஸ்டார்க்கின் பந்து வீச்சுக்கு முன்பு எனது துடுப்பாட்டம் எடுபடவில்லை. என்னை வி[illegible] அவர் மிகவும் சிறந்தவர் தொடர் நாயகர் விருதுக்கு அவர் தகுதியானவர். இந்த உலகக் கோப்பையில் நாங்கள் சிறப்பாக ஆடினோம். இறுதிப் போட்டியில் மோசமாக ஆடியதால் கோப்பையை வெல்ல இயலவில்லை.

# வடமராட்சி கல்வி வலய விளையாட்டு விழா 6 இல் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் ஆறாம் திகதி முதல் ஆரம்பமாக வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி எதிர்வரும் ஆறாம் திகதி ஆண்களுக்கான எல்லே போட்டிகள் அல்வாய் மனோகரா மைதானத்திலும் மறுநாள் ஏழாம் திகதி பெண் களுக்கான எல்லே போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

12 ஆம் திகதி கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளன.

1[illegible] ஆம் திகதி ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரிகளில் நடைபெறவுள்ளன. அதேதினம் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் கொலின்ஸ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

17 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான எறிபந்துப் போட்டிகள் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் 19 ஆம் திகதி உடற்பயிற்சிப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி பெண்களுக்கான கரம், பூப்பந்தாட்டப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பாடசாலையிலும் ,16 ஆம் திகதி ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

அதேதினம் பெண்களுக்கான மேசைப்பந்தாட்டம் மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையிலும், 17 ஆம் திகதி ஆண், பெண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன. (93)




## இன்றைய ஆட்டங்கள்

(அராலி)

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் வலிகாமம் லீக்கிற்குட்பட்ட கழகங்களுக்கிடையே நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்றைய தினம் நடைபெறும் ஆட்டங்கள்

இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் மோதவுள்ளன.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பளை நாகம்மாள் எதிர் பண்டத்தரிப்பு பிறை ஸ்ரார்ஸ் அணிகள் மோதவுள்ளன. (93)

## யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டம் மோகனதாஸ், கலைமதி சம்பியன்

சாவகச்சேரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையே கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியொன்றை நடாத்தி வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தென்மராட்சிப் பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்.மாவட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்று சம்பியன்களாகின.

நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி சிறிமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் தென்மராட்சிப் பிரிவிற்கான இறுதியாட்டம் இடம்பெற்றது.

இதில் மட்டுவில் மோகனதாஸ்-கைதடி வளர்மதி அணிகள் மோதின இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என தமது திறமையை வெளிக்காட்டிய போதிலும் மட்டுவில் மோகனதாஸ் அணி 3:1 என கைதடி வளர்மதி அணியைத் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதனையடுத்து யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையேயான இறுதி ஆட்டம் இடம்பெற்றது. இதில் புத்தூர் கலைமதி, பருத்தித்துறை நவஜீவன்ஸ் அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதலே தமது ஆதிக்கத்தை வெளிக்காட்டிய புத்தூர் கலைமதி அணி 3:1 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. (93)

## லீக் உதைபந்தாட்டம் வெற்றி பெற்ற அணிகள்

(அராலி)

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் வலிகாமம் லீக்கிற்குட்பட்ட கழகங்களுக்கிடையில் 7 பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டியை நடாத்தி வருகின்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த இரண்டு நாட்களாக லீக் ஆட்டங்கள் இடம்பெற்றன.

இதில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆடிய அராலி ஏ.எல். விளையாட்டுக கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் மாதகல் சென்.தோமஸ் யுத்தை எதிர்கொண்ட பண்டத்தரிப்பு. பிறை ஸ்ரார்ஸ் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இளவாலை சென்.லூட் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக பி அணிகளுக்கிடையிலான போட்டியில் இளவாலை சென.லூட 2:0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியில் தெல்லிப்பளை நாகம்மாள், மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் போட்டு சமனிலையில் இருந்தன.

இதனையடுத்து தண்ட உதை மூலம் வெற்றி தீரமானிக்கப்பட்டது. இதில் தெல்லிப்பளை நாகம்மாள் 6:5 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது.

இதேபோன்று இளவாலை யங்ஹென்றிஸ் குப்பிளான் விக்னேஸ்வரா அணிகளுக்கிடையிலான போட்டியிலும் இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் போடவே தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை யங்ஹென்றீஸ் 5:3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இதேவேளை நவாலி சென் பீற்றர்ஸ், அராலி பாரதி அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் நவாலி சென்.பீற்றர்ஸ் 4:2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (93)

## இளம் வீரர்கள் சாதிப்பர் நம்பிக்கை கொள்ளும் மாவன்



இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் சங்காவைப் போல இளம் வீரர்களும் எதிர்காலத்தில் சாதிப்பார்களென அணியின் பயிற்றுவிப்பாளர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கை அணி வீரர்கள் காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வருகின்றனர். இதுவும் இலங்கை அணியின் தோல்விக்கு காரணமாக அமைந்தது

எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் தெரிவு செய்யப்படும் வீரர்களின் உடற்தகுதி கவனமுடன் கண்காணிப்படும் என்றும், இது இலங்கையின் ஏ அணிக்கும் பொருந்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார.

இலங்கையின் தோல்விக்கு இந்தியாவுடனான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் இழந்தது ஒரு வகையில் காரணமாக அமைந்ததா என்ற கேள்விக்குப் பதிலளித்த அத்தபத்து, கண்டிப்பாக அதை முக்கிய காரணமாக கூறமுடியாது.

இருப்பினும் உலகக்கிண்ணத் தொடருக்குச் செல்லும் இலங்கை அணிக்கு அது ஒரு நல்ல நிகழ்வாக அமையவில்லை. இந்தியாவுடன் ஒருநாள் தொடர் என்பது அப்போது அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவு என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று பேசிய அத்தப்பத்து, இது குறித்து கூறுகையில், சந்திமால் எடுத்த ஓட்டங்களை சங்கக்கார 15 போட்டிகளுக்குப் பிறகே எடுத்தார். ஆனால் தற்போது அவர் ஒரு உலகத் தரம் வாய்ந்த வீரராக இருக்கிறார்.

எனவே பொறுமை காத்து இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் போது அவர்களும் சாதிப்பார்கள் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

## உலகக் கிண்ண அணி அறிவித்தது ஐ.சி.சி.

### இந்திய வீரர்களுக்கு கல்தா

உலகக்கிண்ணப் போட்டிகள் நிறைவடைந்த நிலையில் ஐ.சி.சி 11 பேர் கொண்ட உலகக்கிண்ண அணியினை அறிவித்துள்ளது. இதில் சிம்பாப்வே அணியைச் சேர்ந்த டெய்லர் 12 ஆவது வீரராக பெயரிடப்பட்டுள்ளார்.

அணித்தலைவராக பிரண்டன மக்கலம் பெயரிடப்பட்டுள்ளார். அணியில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அணி விபரம் வருமாறு:

பிரண்டன் மக்கலம் அணித் தலைவர் (நியூசிலாந்து) மார்டின் கப்டில் (நியூசிலாந்து)

குமார் சங்கக்கார விக்கெட் காப்பாளர் (இலங்கை) ஸ்டீபன் ஸ்மித் (அவுஸ்ரேலியா)

ஏ.பி.டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) மக்ஸ்வெல் (அவுஸ்ரேலியா) அண்டர்சன் (நியூசிலாந்து)

டானியல் விக்டோரி (நியூசிலாந்து) மிச்சல் ஸ்டார்க் (அவுஸ்ரேலியா) ட்ரெண்ட் போல்ட் (நியூசிலாந்து)

மோர்னே மோர்கல் (தென்னாபிரிக்கா) டெய்லர் (சிம்பாப்வே)

## இடைக்கால கிரிக்கெட் நிர்வாகம் பிரதமர் ரணில் உத்தரவு

இடைக்கால கிரிக்கெட் நிர்வாக சபையொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் பாரியளவு நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடாத்த இடைக்கால கிரிக்கெட் நிர்வாக சபையொன்று உருவாக்கப்பட வுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவிற்கு அமைய இந்த நிர்வாக சபை உருவாக்கப்பட உள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

### மியாமி ஓப்பன் ரென்னிஸ்

## ஜோகோவிச், செரீனா 3 ஆவது சுற்றுக்குத்தகுதி

மியாமி ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் நடப்பு சம்பியன்களான ஜோகோவிச்சும், செரீனா வில்லியம்சும் 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

5ஆவது மியாமி மாஸ்டர் பட்டத்தை எதிர்பார்க்கும் உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் 2ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்லோவாக்கியாவின் கிளிசானை 6-0, 5-7, 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

அதேபோல் பெண்கள் பிரிவில் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், ரோமானியாவின் மோனிகா நிகுலெஸ்குவை 6-3, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.



# மீண்டும் அரசியலுக்கு வருவாரா ராஜபக்ஷ



“நான் இந்த அரசாங்கத்திற்கு எனது ஆதரவை வழங்குகிறேன். ஆனால் அவர்கள் எம்மீது மோசடிக் குற்றச்சாட்டை முன்வைத்து எம்மைச் சிறையிலடைக்க விரும்புகிறார்கள். எங்களுடைய கடவுச்சீட்டுக்களை எவ்வித சாட்சியமுமின்றி எடுத்துள்ளனர். இவ்வாறான ஒரு சூழலில் நான் எவ்வாறு அரசியலிலிருந்து ஓய்வுபெற முடியும்? நான் ஓய்வுபெறப் போகிறேன் என ஒருபோதும் கூறவில்லை. தற்போது நான் ஓய்வெடுக்கிறேன்” என ராஜபக்ஷ நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ஏப்ரல் 2015இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ராஜபக்ஷ போட்டியிட விரும்புகிறார் என்பது உறுதியாகிறது.

நிச்சயமாக, ர்ராஜபக்ஷ மற்றும் அவரது உறவினர்களுக்கு எதிராக நாள்தோறும் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில், முன்னாள் ஜனாதிபதி தனது தீர்மானத்தை மிக விரைவாக எடுக்க வேண்டியுள்ளார். ராஜபக்ஷவாலும் அவரது உறவினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் போன்றன இவர்களின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆனால் இக்குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றில் நிரூபிக்கப்படாவிட்டால், ராஜபக்ஷவை ஆதரிக்கும் 5.8 மில்லியன் வாக்காளர்களும் ராஜபக்ஷவை ஒரு அதிகாரத்துவ ஆட்சியாளராக நோக்குவதை விட இவரைத் தொடர்ந்தும் ஒரு அரசியல் தியாகியாகவே கருதுவார்கள்.

மக்களின் மனநிலையைத் தனக்குச் சாதகமாகத் தக்கவைத்துக் கொள்வதில் ராஜபக்ஷ மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது போல் தெரிகிறது. அரசியல் போட்டியில் மீண்டும் குதிப்பதற்கு முன்னர் சிங்கள மக்களின் ஆதரவை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கான நகர்வுகளிலும் ராஜபக்ஷ ஈடுபடுகிறார்.

இவரது ஆதரவாளர்களாலும் தேசிய சுதந்திர முன்னணி போன்ற சிறிய கட்சிகளாலும் ஒழுங்குசெய்யப்பட்ட இரண்டு ஆர்ப்பாட்டப் பேரணிகள் மிகவும் சிறப்பாக நடந்தேறின. இப்பேரணியில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஆட்சிப்பீடத்தில் அமரவேண்டும் என உந்துதலளிப்பதாகக் காணப்பட்டது.

ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வராவிட்டால் மூன்று முக்கிய விடயங்களைத் தாம் இழந்து விடுவோம் என சிங்கள மக்களும் அரசியற் கட்சிகள் சிலவும் கருதுகின்றன.

ராஜபக்ஷ இல்லாதவிடத்து அரசியல் நிலைத்தன்மை பாதிக்கப்படும் எனவும், நாட்டில் தொழில்வாய்ப்பு மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்கும் சீனாவின் பாரிய திட்டங்கள் தடைப்படலாம் எனவும் புலிகள் மீண்டும் தலையெடுக்கலாம் எனவும் சிங்கள மக்களும் அரசியற் கட்சிகள் சிலவும் அச்சம் கொள்கின்றன.

இப்பரப்புரையில் இடதுசாரிக் கட்சிகளின் பங்களிப்பானது சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகளை தடுப்பதற்கான ஒரு பயனுள்ள விடயமாகக் காணப்படலாம்.

19 ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றின் ஊடாக அரசியல் யாப்பில் இணைப்பதற்கான முயற்சிகளை தேசிய அரசாங்கம் விரைந்து முன்னெடுப்பதானது ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்கான நகர்வாகும்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சிறிசேன தலைமை தாங்குகின்ற போதிலும், கட்சிக்குள் உள்ள ராஜபக்ஷவின் ஆதரவாளர்களின் நகர்வுகளை முறியடித்து ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தடைப்படுத்தி ராஜபக்ஷவுக்கும் அவரது உறவினர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தண்டனை வழங்குவதை நோக்காகக் கொண்டிருக்கலாம்.

ராஜபக்ஷவுக்கு எதிராக சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட தேர்தல் பரப்புரையின் போது நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் தற்போது தேர்தல் ஆணையம். சுயாதீன காவற்துறை ஆணையம். பொதுச்சேவைகள் ஆணையம். அரசியல் சீர்திருத்தப் பேரவை போன்ற ஆணைக்குழுக்களை மீளவும் நிறுவுவதன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி கொண்டுள்ள முக்கிய அதிகாரங்களைக் குறைப்பதற்கு மட்டுமே 19வது திருத்தச் சட்டம் தொடர்பாக ஆராயப்படுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான ஒப்புதலை நாடாளுமன்றம் வழங்கியிருந்தாலும் கூட, இந்த விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழிப்பதை எதிர்த்து நிற்கிறது.

எனினும், நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய நாடாளுமன்றின் கீழ் மேலும் முழுமையான அரசியல் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக அமைச்சர் மங்கள சமரவீ தெரிவித்துள்ளார்.

ஆகவே ராஜபக்ஷ அரசியற் களத்தில் இறங்குவதற்கு முன்னர் நன்றாக ஓய்வெடுக்கின்ற போதிலும் இவர் சிறிதளவு. ஆனால் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது போலவே தெரிகிறது.

**- கேணல் ஹரிகரன்**

# உண்மைகளை மறைத்துச் செய்யும் கபட அரசியல்

தமிழ் மக்களுக்குப் பலவாறான பொய்கள் பலகாலமாகச் சொல்லப்பட்டுள்ளன. அதன் பயனாகப் புறவுலகு பற்றிய தமிழரின் விளக்கம் மிகவும் வக்கிரப்பட்டுள்ளது. சொன்ன பொய்கள் ஒவ்வொன்றும் குறுகிய காலத்திலேயே அம்பலமாகியபோது புதிய பொய்கள் பழைய பொய்களின் இடத்தைப் பிடித்துவிடுகின்றன. இதுதான் நமது அவலம்.

எவ்வாறோ தமிழ்ச் சமூகம் எப்போதுமே ஏமாறுவதற்குத் தயாராக உள்ளது. இதற்கான அடிப்படைக் காரணம் நாங்கள் எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றலுடையவர்கள் என்ற உண்மை எங்களிடமிருந்து அடுத்தடுத்து மறைக்கப்பட்டுள்ளமை என்பேன்.

முட்டாள்தனமான அரசியற் பாதையிற் போய்ப் போட்ட கணக்குப் பொய்யானபிறகு “இனிமேற் கடவுள்தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்” என்று சொன்ன “தீர்க்கதரிசியின்” அங்கலாய்ப்பு இப்போது இந்தியா தான். ஐ.நா. தான் அமெரிக்காதான், சர்வதேச சமூகம் தான் என்று மாறிமாறிப் பிரார்த்தனைகளை முன்வைக்கும் நிலைமைக்கு வந்து சேர்ந்துள்ளது. சத்தியாக்கிரகப் போராட்டம் தோற்றதன் பிறகு, அத்தோல்விக்கான காரணங்களை ஆராய அக்கறையில்லாமல், மெல்ல மெல்ல ஒவ்வொரு அயல்நாட்டினதும் தயவில் தங்கியிருக்க நமது தலைமைகள் முற்பட்டன.

இதுவரை ஏமாந்தது போதாதா? இனியாவது யாரை நம்புமாறு சொல்லுகிறார்களோ, சொல்லப்படுவோரின் யோக்கியத்தை



நினைத்துப் பார்ப்போமா? எந்தப் பொய்களைச் சொன்னால் எமது ரட்சகர்கள் எனச் சொல்லப்படுவோர் அக மகிழ்வார்களோ அந்தப் பொய்களை எல்லாம் கூசாமல் ஆராய்ந்தறிந்த உண்மைகளைப் போலச் சொல்லும் அரை வேக்காட்டு நிபுணர்கள் வரிசையிற் காத்திருக்கிறார்கள். ஆனால் எளிமையான, நேர்மையான, தர்க்கரீதியான விசாரணை நமக்கு உண்மைகளை உணர்த்தவேண்டும்.

மேற்குலகை நம்ப வேண்டாம் என்று சொல்லுகிறேன். இந்தியாவை நம்பவேண்டாம் என்று சொல்லுகிறேன். ஏனென்று எவருங் கேட்டால் என் காரணங்களை என்னால் விரிவாக விளக்க இயலும். யாரும் மறுத்தால் அவருடன் தகவல்களின் அடிப்படையில் விவ[illegible] இயலும். அவ்வாறு இ[illegible]லாமல், வெறும் ஊகங்[illegible]களின் மீது எனது [illegible]களைக் கட்டியெழுப்[illegible] தவறு. எனவேதான். திரும்பத் திரும்பச் சி[illegible] உண்மைகளை வலியுறு[illegible] வருகின்றேன்.


தமிழ்த்தேசியவாதம் தோற்றுவிட்டது. அதனுடைய தமிழீழம் என்ற வாக்குறுதி பொய்த்துவிட்டது. அதுமட்டுமன்றி தமிழ்ச்சமூகம் சர்வதே[illegible]ரீதியாக மிகவும் தனிமை[illegible]ப்பட்டுள்ளது. இந்த அவல[illegible]திலிருந்து எவ்வாறு மீள்வது என்று விளங்[illegible]காமல் மீண்டும் மீண்டு[illegible] நம்மை ஏய்த்தவர்களையே நம்புமாறு நாம் வற்புறுத்தப்படுகிறோம். இதிலிருந்து நாம் விடுபடுவது எப்போது?

உலக வரலாற்றில் எந்[illegible] மேலாதிக்க சக்தியும் [illegible] மனித சமுதாயத்தினதும் நலன்களைப் பற்றி அக்[illegible]றைப்பட்டதில்லை. ஆ[illegible] தனது வசதிக்காக ஒரு சிறு சமூகப்பிரிவைத் தனக்கு நெருக்கமாக்கிக் கொள்கிறது. தனக்கு

# சிறுநீரை அடக்காதீர்கள்!

குணப்படுத்த முடியாத நோய்களின் எண்ணிக்கை இப்போது அதிகரித்து வருகிறது. அவற்றில் ஒன்று ப்ரொஸ்ரேற் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் Prostate Cancer.

இங்கிலாந்தில் இந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை அதிகம். மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை விட இந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 30 ஆயிரம் அதிகம்.




நவீன கருவிகள், மருத்துவமுறைகள் வந்த பின்பும் இந்த நோயைக் குணப்படுத்த முடியவில்லையாம்.

ஆனால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் உயிரோடு இருக்கும் காலம் 2 ஆண்டுகள் அதிகரித்திருக்கிறதாம்!

50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்குச் சிறுநீரை அடக்க முடியாமை, இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல் போன்ற பிரச்சினைகள் இருந்தால், உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

# ஏகாதிபத்திய ஆடுகளமாக மாற்றப்படும் இலங்கை



ஜனாதிபதியும் பிரதமரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் மூடிய அறைக்குள் நடாத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகவே தேசிய அரசாங்கம் நடைமுறைக்கு வந்தது என்று ஊடகங்கள் தெரிவித்தன. இவர்கள் மூவரும் அந்த முடிவுக்கு வருவதற்குக் காரணமாக இருந்தது என்ன என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

அவசரமாகத் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்குப் பாரிய தேசியப் பிரச்சினை ஏதாவது தோன்றியிருக்கின்றதா? நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத பிரதான பிரச்சினையாக இப்போது இருப்பது இனப்பிரச்சினை. ஆனால் இனப் பிரச்சினையின் தீர்வு தேசிய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இருப்பதாகத் தெரியவில்லை.

அண்மைய ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னணியை நோக்கினால் தேசிய அரசாங்கம் அமைந்த நோக்கத்தை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும் ஆட்சி மாற்றத்தின் பின்னணியில் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கூட்டு முயற்சியொன்று இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நாடுகள் ஆட்சி மாற்றத்தை நோக்கிச் செயற்பட்டதற்கு மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்குச் சார்பானவராக இருந்தது காரணம் என்று சொல்லப்பட்டது. இது மேலோட்டமான விளக்கம்.

இலங்கையின் பொருளாதார மற்றும் வெளியுறவுக் கொள்கைகளைத் தங்களுக்கு ஏற்றவாறு தகவமைக்க முடியவில்லை என்பதும் இலங்கையின் உள் விவகாரங்களில் தங்கள் மேலாதிக்கம் செல்லுபடியாகவில்லை என்பதுமே பிரதான காரணங்கள். இந்த நோக்கங்களுக்குச் சாதகமான ஆட்சிமாற்றமொன்றை ஏற்படுத்துவதில் இந்நாடுகள் வெற்றியடைந்திருக்கின்றன. மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினது பேரினவாத நகர்வுகளும் இந்த வெற்றிக்குக் கைகொடுத்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் பிரசாரத்தின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு அமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ரணிலைப் பிரதமராக ஏற்றுக் கொண்ட போதிலும் ஆட்சியை ஏற்று நடாத்துவோம் என்ற கருத்து இடைக்கிடை வரத் தொடங்கியது. ஆட்சி மாற்றத்துக்குப் பின்னாலிருந்து செயற்பட்ட நாடுகள் அப்படி ஏதாவது நடப்பதை அனுமதிக்கப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியே எப்போதும் அந்நாடுகளின் நெருங்கிய சகபாடி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே இந்நாடுகளின் விருப்பம். தேசிய அரசாங்கத்தின் மூலம் இந்த விருப்பம் நிறைவேறியிருக்கிறது.

மேற்கத்திய நாடுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பயன்படுத்துகின்றனவேயொழிய அக்கட்சியின் கை ஓங்குவதை ஒருபோதும் விரும்பப் போவதில்லை. முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்கள் மேற்கொண்ட முற்போக்கு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகளினால் மேற்கத்திய நாடுகள் நேரடியாகவே பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை இந்த நாடுகள் ஒருபோதும் மறக்கப் போதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான போட்டியில் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சாதகமாகவே மேற்கிந்திய நாடுகள் செயற்படப் போகின்றன. தேசிய அரசாங்கம் அத்தகைய ஒரு முயற்சியின் வெளிப்பாடல்ல என்று உறுதியாகக் கூறமுடியாது.

நாடு மெல்ல மெல்ல ஏகாதிபத்தியத்தின் ஆடுகளமாக மாறும் நிலையை நாங்கள் எதிர்நோக்கி நிற்கிறோம். இந்த ஆபத்தை முளையிலேயே கிள்ளுவதற்கான முயற்சி காலத்தின் தேவையாகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் தள்ளாமலிருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

**- சிவா சுப்பிரமணியம்**

---

வேண்டாத போது தன்னை விலக்கிக்கொள்கிறது. தமிழ் மேட்டுக்குடிகளில் ஒரு பகுதி யினரும் சிங்கள மேட்டுக் குடிகளில் ஒரு பகுதியினரும் பிரித்தானிய கொலனியத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்தார்கள். அதன்மூலம் அவர்கள் சொத்துக் குவித்தார்கள். பட்டம் பதவிகள் பெற்றார்கள். தம்மைச் சமுதாயத்தின் பல்வேறு தளங்களில் தலைமையில் அமர்த்திக் கொண்டார்கள்.

தங்களுடைய வளமான வாழ்வுக்கு உத்தரவாதமாகத் தங்களுடைய பழைய எசமானர்களை நம்பினார்கள். தேசிய சிறுபான்மையினருக்குப் பாதகமான டொனமூர், சோல்பரி யாப்புக்களை அமைத்த பிரித்தானிய ஆட்சியினர் சிங்களம் மட்டுமே சட்டத்தின் தவறுகளைத் திருத்த உதவுவர் என்று ஒரு தலைவர் மகாராணிக்குத் தந்தியடித்தார். இன்னொரு பகுதியினர் பிரிவிக் கவுன்சிலுக்கு மேன்முறையிட்டு ஏமாந்தனர்.

அதன் பின்பு இந்தியா கைகொடுக்குமென்று கனாக் கண்டனர். பின் அமெரிக்கா கைகொடுக்குமென்று தவமிருந்தனர். ஐரோப்பாவிடமும் ஐ.நா. விடமும் கெஞ்சினர். இப்போது அந்தக் கனவுகள் எல்லாம் எங்கே போய் நிற்கின்றன? மனித உரிமை மீறல், போர்க்குற்ற விசாரணைகள் பற்றி சர்வதேச விசாரணையே போதுமென்ற அவலத்தினிடையே அந்த விசாரணைகளும் நடவா என்று தெரிகிற சூழ்நிலையில், அவற்றுக்கும் அப்பாற் போய் இனப்படு கொலை பற்றிய விசாரணை நடாத்துமாறு தீர்மானம் நிறைவேற்றித் தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத் தூவுகின்றனர்.

**- கோகர்ணன்**

---

# வெளிச்சக்திகளின் பங்களிப்பை நினைவு கூரும் புதிய அரசாங்கம்



புலிகளுக்கெதிரான போரில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான நாடுகளின் பங்களிப்பை பிந்தியதாக புதிய அரசாங்கம் நினைவு கூர்ந்திருக்கிறது.

சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலான ஜனாதிபதி மைத்திரிபாலவின் அந்நாட்டுக்கான விஜயத்தை அடுத்து வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா இந்த நாடுகளுடன் இலங்கை அரசு உறவுகளை தொடர்ந்தும் வலுப்படுத்தவுள்ளதாக ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

அதேவேளை மேற்குலக நாடுகளுடன் இலங்கை வலுப்படுத்திக் கொண்டுள்ள உறவு சீனாவுடன் பேணிவரும் எந்த உறவுகளையும் பாதிக்காது என தெரிவித்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் சீனாவுடன் பகைத்துக்கொண்டு மேற்குலக நாடுகளுடன் தொடர்புகளை ஒருபோதும் பேணப்போவதில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

சீனாவுக்கான இலங்கை ஜனாதிபதியின் விஜயத்தின் போது, சீன ஜனாதிபதியுடன் ஒரு மணி நேரமாக நடைபெற்ற பேச்சுக்களில் இந்தியாவை உள்ளடக்கிய முத்தரப்பு ஒத்துழைப்பு திட்டம் குறித்து இரு நாட்டு ஜனாதிபதிகளும் ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியா தனது பாதுகாப்புத் தொடர்பில் எதிர்கொள்ளும் தேவையற்ற அச்சங்கள், சந்தேகங்களை போக்கும் நோக்கில் இந்த முத்தரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு நாட்டு ஜனாதிபதிகளும் ஆராய்ந்திருக்கிறார்கள்.

இதில் சீனாவின் புதிய கடல் பட்டுப்பாதை திட்டம் தொடர்பில் இந்திய தரப்பில் எழுந்துள்ள சந்தேகங்களை போக்குவதும் பிரதானமாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது.


இந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே சீனாவுடன் பகைத்துக் கொண்டு மேற்குலக நாடுகளுடன் இலங்கை ஒருபோதும் உறவுகளை வலுப்படுத்த முனையாது என்கிற ஒரு கருத்தை வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்ததில் சீனா மற்றும் மேற்குலக நாடுகளின் பங்களிப்பை நினைவு கூர்ந்திருக்கும் வெளி விவகார அமைச்சர் இவ்விடத்தில் இலங்கையின் அணிசேராக் கொள்கையையும் கூடவே வலியுறுத்தியிருப்பது கவனத்துக்குரியது.

எந்த ஒரு நாட்டையும் நாம் பகைத்துக் கொள்ளப் போவதில்லை. அனைத்து நாடுகளதும் ஒத்துழைப்பின் அவசியத்தை நாம் தெளிவாக உணர்கிறோம் என அவர் தெரிவித்திருக்கிறார்.

**- சா்லையூரான்**

---



தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளடங்கலான அனைத்துலக சக்திகளின் ஆதரவை திரட்டப் போவதாக கூறிக்கொண்டிருக்கும் கூட்டமைப்பு, தனக்குள் இருக்கும் முரண்பாடுகளைக் கூட நிவர்த்திசெய்து கொள்ள முடியாதளவிற்கல்லவா திணறிக் கொண்டிருக்கின்றது.

# பிழைப்பைக் கெடுக்கும் தமிழனின் பெருநினைப்பு

அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் இது பற்றி நேரடியாகவே குறிப்பிட்டிருக்கின்றார். கூட்டமைப்பின் ஒற்றுமையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அதனைத் தளரவிடக் கூடாதென்றல்லவா கூறிச் சென்றிருக்கிறார். இந்திய வெளி விவகார அமைச்சர் ஒருவர்.

இந்தளவு கூட்டமைப்பின் ஒற்றுமையை அழுத்திச் சொல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இந்திய வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புடைய ஒருவர் குறிப்பிடும்போது, அங்கு கூட்டமைப்பு தொடர்பில் பெரியளவு நம்பிக்கை காணப்படவில்லை என்று குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட ஒரு விடயம் முக்கியமானது - கூட்டமைப்பின் தலைவர்களுக்கு தங்களின் உண்மையான நிலைமை தெரியவில்லை போலல்லவா தெரிகிறது என்று அவர்களே சலித்துக் கொள்ளும் அளவிற்கு நிலைமைகள் காணப்படுகின்றன.

உண்மையில் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு மட்டுமல்ல வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் இருந்து அரசியல் பேசும் பெரும்பாலானவர்களுக்கு, தமிழர்களின் இன்றைய நிலைமை தெளிவாக விளங்குவதாக என்னால் சொல்ல முடியாது. தமிழர்கள் இந்த உலகத்திற்கே தேவையானவர்கள் எனவே, எங்களுக்கு எல்லோரும் அரசியல் பணிவிடை செய்ய வேண்டியது அவர்களின் கடமை போன்றே பலரும் பேச முற்படுகின்றனர்.


ஆனால் நாங்கள் எப்போதுமே மற்றவர்களின் நலன்களை விளங்கிக்கொள்ள மாட்டோம் ஆனால் அவர்கள் அனைவரும் எங்களின் நலன்களை விளங்கிக்கொண்டு எங்களுக்காக பேசவேண்டும் என்பதே எங்களின் அநேகரது எதிர்பார்ப்பாக இருக்கிறது. முதலில் இப்படியான மனநிலையிலிருந்து வெளியில் வரவேண்டும்.

இன்றைய சூழலில் தமிழர்களிடம் என்ன இருக்கிறது? இதற்கல்லவா முதலில் விடையை நாம் தேடவேண்டும். இதற்கான விடையைத் தெளிவாக கண்டுகொண்டலல்லவா அடுத்து எங்கு போகலாம் என்பது தொடர்பில் விவாதிக்க வேண்டும். இங்கு தமிழர்களுக்கென்ற ஒரு அங்கீகரிக்கப்பட்ட குரலாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளேயே ஒரு ஒருமித்த குரல் இல்லை. ஐந்து வருடங்கள் முயன்றும் இன்றுவரை அதில் ஒரு முன்னேற்றத்தைக் காண முடியவில்லை. உண்மையில் இது தொடர்பில் ஒட்டுமொத்த தமிழர்களும் வெட்கப்படவேண்டும்.

விரைவில் அடுத்த நாடாளுமன்றத்தேர்தல் வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படும் சூழலில், மீண்டும் எங்களுக்கு குழிபறிக்கப்படுமோ என்னும் எண்ணம் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகள் மத்தியில் உருவாகிவிட்டது. குறிப்பாக அடுத்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு மட்டுமே ஆசனம் வழங்குவதாக ஒரு தகவல் உலவவிடப்பட்டுள்ளது. இது ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மத்தியில் தடுமாற்றத்தையும் ஒருவித கோபத்தையும் ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது. உண்மையில் ஒருவேளை முன்னரைப்போன்று ஆயுதங்கள் பயன்படுத்தும் சூழலில் இருப்பின் நிச்சயம் சில தலைவர்கள் கொல்லப்பட்டுமிருக்கலாம் என்னுமளவிற்கு இன்றைய கூட்டமைப்பின் முரண்பாடுகள் பாரதூரமானது.

**- யதீந்திரா**

# ஒற்றுமையின் பலம்



பிஞ்சுகளே, சிங்கம் என்றாலே நமக்குச் சொல்லப் பட்டிருப்பது அதன் கம்பீரமான நடையும், வீரமும், காட்டுக்கே ராஜா என்பதும் தானே. அப்படிப்பட்ட சிங்கத்தையே தமது ஒற்றுமையால் ஓட ஓட விரட்டியுள்ளது காட்டெருமைகள் கூட்டம்.

எருது, சிங்கம் கதையினைக் கேட்டிருப்பீர்கள் - படித்தும் இருப்பீர்கள். அந்தக் கதையில் ஒற்றுமையாக இருக்கும் வரை எருதுகளை சிங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாது. தனித்தனியாகப் பிரித்து விட்டு, ஒவ்வொரு எருதாக வேட்டையாடி சிங்கம் சாப்பிட்டுவிடும் என்பது கதை மட்டுமல்ல, நிஜத்திலும் நடந்திருக்கிறது. இது நடந்தது நம் நாட்டில் அல்ல, கென்யாவில். கென்ய நாட்டின் காட்டுப் பகுதியில் வசித்துவரும் சிங்கம் ஒன்று, காட்டெருமைக் கூட்டத்தைப் பார்த்ததும் ஓர் எருமை மாட்டிற்குக் குறி வைத்துத்தாக்க முயற்சி செய்துள்ளது. உடனே எச்சரிக்கை அடைந்த காட் டெருமைகள் சிங்கத்தைத் துரத்த ஆரம்பித்துள்ளன. உயிர் பயம் என்பது எல்லோருக்கும் உண்டு தானே, பயந்து போன சிங்கம் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்துள்ளது. பசி, ஏமாற்றம், உயிர்பயம் நிறைந்த சிங்கத்தின் ஓட்டத்தையும் உணர்ச்சியையும் காணொளியில் (வீடியோ) காணுங்கள்.





ஒற்றுமையே பலம் என்பதை உணர்ந்து உங்கள் நண்பர்களிடம், உடன் பிறந்தவர்களிடம் உறவினர்களிடம் பழகுங்கள்.

## ஏது என்று உங்களுக்குத் தெரியுமா?

* "உலகின் புனித பூமி" என்று அழைக்கப்படுவது - பலஸ்தீனம்
* "மரகதத்தீவு" என்று அழைக்கப்படுவது - அயர்லாந்து.
* "கங்காருபூமி" என்று அழைக்கப்படுவது - அவுஸ்ரேலியா
* "வெள்ளை யானை பூமி" என்று அழைக்கப்படுவது - தாய்லாந்து.
* "உதயசூரியனின் பூமி" என்று அழைக்கப்படுவது - ஜப்பான்.
* "நைல் நதியின் நன்கொடை" என்று அழைக்கப்படுவது - எகிப்து.
* "அல்லி மலர்களின் பூமி" என்று அழைக்கப்படுவது - கனடா.
* "கேக்குகளின் பூமி" என்று அழைக்கப்படுவது - ஸ்கொட்லாந்து.
* "ஹெர்ரிங் குளம்" என்று அழைக்கப்படுவது - அட்லாண்டிக் கடல்
* "தங்கப் பகோடாக்களின் பூமி" என்று அழைக்கப்படுவது - மியான்மர்.
* "ஆயிரம் ஏரிகளின் பூமி" என்று அழைக்கப்படுவது - பின்லாந்து.
* "நள்ளிரவு சூரியனின் பூமி" என்று அழைக்கப்படுவது - நோர்வே
* "இலவங்கத்தீவு" என்று அழைக்கப்படுவது - மடகஸ்கார்.
* "ஐரோப்பாவின் நோயாளி" என்று அழைக்கப்படுவது - துருக்கி.
* "ஐரோப்ப பார்வையாளர் மேடை" என்று அழைக்கப்படுவது - பெல்ஜியம்.




# வரைந்து பழகுவோம்



## முதன் முதலில் சாதனை படைத்த பெண்கள்

### வேலன் டினா விளாடி ரோவ்னா



விண்வெளிக்குச் சென்ற முதல்பெண், முதன் முதலில் நடந்தவர் என்ற பெருமையினை ரஷ்யாவைச் சேர்ந்த வேலன் டினா விளாடி ரோவ்னா பெற்றுள்ளார். (1963 ஜூன் 16)

### சிறிமாவோ பண்டாரநாயக்கா

உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா. (இலங்கை, 1960)



### அன்னாசாண்டி

இந்தியாவின் முதல் பெண் நீதிபதி அன்னா சாண்டி.





### காரட் அண்டர்சன்

உலகிலேயே முதன் முதலில் மருத்துவப் படிப்பு முடித்து டாக்டர் பட்டம் பெற்ற பெண் காரட் அண்டர்சன். தத்துவ மேதை பெட்ரண்ட் ரசல் பிறக்கும்போது அவரது தாய்க்கு மருத்துவம் பார்த்தவர்.

### கெர்ரூட் எடர்லி

ஆங்கிலக் கால்வாயை முதன்முதலில் கடந்த பெண் கெர்ட்ரூட் எடர்லி. பிரான்ஸ் இங்கிலாந்து இடையே சாதனை செய்தார்.



### அமிலியா இயர்ஹர்ட்



அமெரிக்கப் பெண் விமான ஓட்டி அமிலியா இயர்ஹர்ட் அட்லாண்டிக் கடல்மீது பறந்த முதல் பெண்மணி. (1928ஆம் ஆண்டு ஜூன் 17 கனடாவிலிருந்து பிரிட்டன் வரை சென்றார்.)

தொடர்ச்சி அடுத்தவாரம் .......

# பாரிய நெருக்கடியில் உள்ள முக்கொம்பன்-அக்கராயன் வீதி



யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி வழியாக அக்கராயன் நோக்கி 70 கிலோமீற்றர் பயணிக்கும் அரச பேருந்து முக்கொம்பனுக்கும் அக்கராயனுக்கும் இடையில் குன்றும்குழியுமான வீதியில் பெரும் இடர்களை எதிர்கொண்டு பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

வீதி அபிவிருத்தித் திணைக்களம் 427 மில்லியன் ரூபா செலவில் கோணாவில் சந்தியிலிருந்து அக்கராயன் பிள்ளையார் கோவில் வரையிலும், அக்கராயன் மருத்துவமனை சந்தியிலிருந்து அணைக்கட்டு வீதி வழியாக கரும்புத்தோட்டம் வரையான வீதிகளை புனரமைப்பதற்கான வேலைகளை தொடங்கியுள்ளநிலையில் முக்கொம்பனிலிருந்து கரும்புத்தோட்டம் வரையிலும் ஸ்கந்தபுரம் சந்தியிலிருந்து அக்கராயன் மகா வித்தியாலயம் வரையான வீதிகள் தற்போது குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றன.

இதன்காரணமாக யாழ்ப்பாணத்திற்கும் அக்கராயனுக்குமிடையில் நாள்தோறும் நடைபெறுகின்ற அரசபேருந்து பெருமநெருக்கடிகளுக்கு மத்தியில் இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி, முக்கொம்பன், ஸ்கந்தபுரம், அக்கராயன் ஆகிய பாடசாலைகளுக்கு வருகைதரும் ஆசிரியர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் பூநகரி அக்கராயன் பகுதி மக்களின் ஒரேயொரு போக்குவரத்து வழிமுறையாக காணப்படும் யாழ்ப்பாணம் அக்கராயனுக்கான அரச பேருந்து சேவையினை சிறப்பாக மேற்கொள்வதற்கு மேற்படி வீதி சேதமடைந்திருப்பது பெரும் இடராகக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(160)

# பெண்கள் தம்மைப் பாதுகாக்கும் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்

## பருத்தித்துறை பிரதேச செயலர் தெரிவிப்பு

பெண்கள் தம்மைப் பாதுகாக்கும் பண்புகளை வளர்த்துக்கொள்ளவேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் "பெண்களிற்கான சிறந்த நாடு'' என்ற தலைப்பில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் இந் நிகழ்வு இடம பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக 'யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள ஓய்வு நிலை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராஜன், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திருமதி சந்திரபாமா தர்மராஜா,வல்வெட்டித்துறை நகரசபை செயலாளர் திருமதி கிரிஜாவாசுதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையில் பெண்கள் தமக்கெதிரான செயற்பாடுகளிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனூடாகவே பெண்கள் வெற்றி கொள்ள முடியும் எனவும்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பெண்களைவிட ஆண்கள் மிகக் குறைவாகவே கடமையாற்றுவதாகவும், குறிப்பாக பணியாற்றும் பெண்களில் அதிகமானவர்கள் தங்களின் துணைகளை இழந்தவர்களே எனவும் குறிப்பிட்டார்.

# சிறப்புற நடைபெற்ற வெளியீட்டுவிழா



தனித்தமிழ் ஆர்வலரும் குமரித் தமிழ்ப்பணி மன்ற நிறுவுநருமாகிய நா.வை.குமரிவேந்தன் ஆக்கிய 'உலக உயர்தனிச் செம்மொழி,செந்தமிழ் தமிழர் இலக்கிய இலக்கணம் ஓர் அறிமுகம், தமிழர் மெய்யியற் கோட்பாடு'' ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராசன் அவரது துணைவியார் சாந்தி நடராசன், வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா நாடாளுமன்ற உறுப்பினர், சி.சிறிதரன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் நி.யோண்குயின்ரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வர் வண. தா.ச.சொலமன்,நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் புலவர் அ.வெ.அரியநாயகம்,வவுனியா தமிழ்ச்சங்க நிறுவுநர் தமிழருவி த.சிவகுமாரன், கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகச் செயலர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் வன்னி மற்றும் நெடுந்தீவுப் பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் கலந்து சிறப்பித்தனர். மலையகத்தில் இருந்து பத்திற்கும் மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்கள் வருகை தந்திருந்தனர். யாழ். மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி நூலகங்களுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபா மதிப்புள்ள நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(63, 48)

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழில் வரலாறு குறித்து நன்றாக எழுதுவதற்கு தமிழ் நன்றாக எழுதத் தெரிந்திருந்தால் போதும் என்னும் நம்பிக்கை ஆழமாக இங்கே வேரூன்றியிருக்கிறது. அதன் விளைவாக சுவாரஸ்யமாக எழுதக்கூடிய நாவலாசிரியர்களும் கவிஞர்களும் சிறுகதை ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் பத்தி எழுத்தாளர்களும் தங்கள் படைப்பிலக்கியத்தோடு சேர்த்து வரலாறும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆம், ஆங்கிலத்திலும் $l Popular History புத்தகங்கள் எழுதப்பட்டு வருகின்றன; நன்றாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் வரலாறு என்றால் அவை மட்டும்தான் என்னும் நிலை அங்கில்லை. தமிழில் அப்படிச் சொல்லமுடியுமா?

ஆட்சியாளர்களையும் அதிகாரத்தில் இருப்பவர்களையும் ஆய்வு செய்யவோ மதிப்பீடு செய்யவோ கூடாது என்பதல்ல இங்கே விஷயம். வரலாறு என்பது தரைக்கு இறங்கிவருவது. பூமியில் கால்களைப் பதித்து நடந்து செல்லும் சாமானியர்களையும் அவர்களுடைய சூழலையும் வரலாறு பதிவு செய்யவேண்டும். நீண்டகாலமாக கண்டுகொள்ளாமல் விடப்பட்ட பெண்களின் குரல் ஒலிக்கவேண்டும். மாற்றுப் பாலினத்தவர்கள். ஏழைகள், சிறு வியாபாரிகள், விளிம்புநிலை மனிதர்கள் என்று இதுவரை ஆய்வு செய்யப்படாத துறைகள் ஆராயப்படவேண்டும். இந்த வகை People's history ஆங்கிலத்தில் அதிகம். 1)Sage 2)Routledge 3)Cambridge 4)Oxford ஆகிய பதிப்பகங்களின் இணையத்தளத்துக்குச் சென்று வரலாற்றுத் துறையில் அவர்கள் கொண்டுவந்திருக்கும் புத்தகங்களை ஒருமுறை பாருங்கள். Historiography என்பது எவ்வளவு பெரிய பெருங்கடல் என்பது புரியவரும். பலவிதமான கோட்பாட்டு மற்றும் தத்துவார்த்த மோதல்கள் இத்துறையில் நித்தம் நித்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மீள்வாசிப்புகளும் மறுஆய்வுகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அறிவியல் துறையைப் போலவே புதிய கண்டுபிடிப்புகள் மலர்ந்துகொண்டிருக்கின்றன.

**– பேராசிரியர் ஆர்.மகாலக்ஷ்மி**

பொதுவாகவே எனக்கு இந்த அய்யா என்ற வார்த்தை அசூயையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. ஏனென்றால். அய்யா என்ற வார்த்தையைப் பயன்படுத்துபவர்கள் நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளைக் கொண்டவர்களாக இருப்பதையே காண்கிறேன். மார்க்சீயவாதிகளாக இருந்தாலும் அவர்களிடம் செயற்படுவது நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகள் தாம். மதத்துக்குப் பதில் மொழி வெறி. உலகிலேயே என் மொழிதான் சிறந்த மொழி. என் இனம் தான் சிறந்த இனம். உலகிலேயே என் இனம் தான் மிக அதிகமாக ஒடுக்கப்படுகிறது. ஆ...ஊ... ஆ...ஊ... இன வெறி. மொழி வெறி, ஜாதி வெறி, ஆணாதிக்கம், கலாசார அடிப்படைவாதம் இன்னபிற எல்லாம்தான் நிலப்பிரபுத்துவ சிந்தனைகள். அய்யா என்ற வார்த்தை எனக்கு ஜாதி அடையாளத்தை மட்டுமே ஞாபகப்படுத்துகிறது.


1947–இறகு முந்தைய காலத்தில் வாழ்ந்த ஒரு தீண்டத்தகாதவனைப் போல் தான் நான் யோசிக்க வேண்டியிருக்கிறது. தீண்டாமையை நிர்ப்பந்தித்த இந்து மதமா? தேசத்தைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் வெள்ளைக்காரனா? அய்யா என்று சொல்பவர்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தை வெறுப்பவர்கள். ஆங்கிலம் தெரியாதவர்கள். பத்தாம்பசலிகள். நிலப்பிரபுத்துவ சிந்தனைகளில் ஊறிய அதிகார குணம் கொண்டவர்கள். பெண்கள் கால் மேல் கால் போட்டு அமர்ந்தால் கூட அவர்கள் சகிக்க மாட்டார்கள். பெண்கள் சேலை தாவணி தவிர்ந்த ஆடைகள் அணிவதை தாங்க மாட்டாதவர்கள். இப்படிப்பட்ட கொடூரமான ஆணாதிக்க சிந்தனை கொண்டவர்களே அய்யா என்று அழைக்கிறார்கள். அய்யா என்பது தீண்டத்தகாதவனாக நடாத்தப்பட்ட என் பாட்டன் அவன் ஆண்டையை அழைத்த வார்த்தை.

**– சாருநிவேதிதா**

"ஒரு புது உலகுக்காக போரிடுவோம். அனைவருக்கும் வேலை கொடுக்கும் ஒரு பண்பட்ட சமுதாயத்திற்காக போரிடுவோம். நல்ல எதிர்காலத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக போரிடுவோம். இதே போன்ற முழக்கத்தோடுதான் போலிகள் வருவார்கள். இதை நிறைவேற்றுவோம் என்று சத்தியம் செய்வார்கள். ஆனால் அவர்கள் சொன்னதெல்லாம் பொய். அந்த சத்தியங்களை அவர்கள் எப்பொழுதும் நிறைவேற்ற மாட்டார்கள். இவர்கள் தங்களை மட்டும் விடுவித்துக் கொண்டு மொத்த சமுதாயத்தையும் அடிமைப் படுத்துவார்கள்".

**– The Great Dictator (1940) திரைப்படத்தில் சார்ளி சப்ளின்**

# இலங்கை தமிழ் விஞ்ஞானி ஒபாமாவினால் கௌரவிப்பு



விஞ்ஞான, கணித, மற்றும் பொறியியல் வழிகாட்டுதலுக்கான சாதனையாளர்களுக்கான அமெரிக்க அதிபர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள, இலங்கைத் தமிழரான விஞ்ஞானி உள்ளிட்ட 14 பேர் அமெரிக்க அதிபர் ஒபாமாவினால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அமெரிக்க அதிபரினால் விருது அளிக்கப்படவுள்ள 14 பேரில், இலங்கைத் தமிழரான திலக் ரத்னநாதரும் ஒருவராவார்.

திலக் ரத்னநாதர், அமெரிக்காவின் மேரிலான்ட், ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக, உயிரிமருத்துவ பொறியியல் பீடத்தின், உதவிப் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இந்த ஆண்டு இறுதியில் வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ள நிகழ்வில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவினால் இவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கல்வியாளர்கள் அமெரிக்காவின் எதிர்கால விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், கணிதவியலாளர்களை உருவாக்க உதவியுள்ளனர் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபரின் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 14 பேரில், மூர்த்தி எஸ்.கம்பம்பட்டி என்ற இந்திய வம்சாவளி உயிரியல் பேராசிரியரும் அடங்கியுள்ளார். இவர்களுக்கு 10 ஆயிரம் டொலர் பணப்பரிசும், கௌரவ விருதும் அளிக்கப்படவுள்ளது.

# எறிகணை சிதறல்களுடன் திரியும் மாணவர் விபரங்கள் திரட்டப் பணிப்பு



ஷெல் துண்டுகள் உடம்பில் துளைத்த நிலையில் அவற்றை இதுவரையில் அகற்றாதுள்ள முல்லைத்தீவு மாணவர்களின் விபரங்களை சேகரிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனுக்கு, பிரதமர ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரச அதிகாரிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான் கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, அங்கு உரையாற்றிய சிவில் அமைப்பொன்றின் பிரதிநிதியொருவர், "முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் உடம்பில் ஷெல் துண்டுகளைத் தாங்கியவாறு வாழ்ந்து வருகின்றனர் எனக் கூறினார். அவரது கருத்தை அவதானித்த பிரதமர், மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வறிய குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ள குடும்பங்கள் ஆகியவற்றின் விபரங்களைத் திரட்டுமாறும் பிரதமர் உத்தரவிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் விக்கிரமசிங்க, "யுத்தத்தின்போது உளரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு உளநல வைத்தியர்கள் 300பேரின் தேவை ஏற்பட்டுள்ளது. இதனை இந்தியாவிடம் கோரியுள்ளோம். இந்த நடவடிக்கையில் இராணுவ வைத்தியர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள்" என்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், கடந்த 30 வருடங்களாக திணைக்களத்திடம் கையளிக்கப்படாமல் பொலிஸாரிடம் இருப்பதாக பிரதமரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்த பிரதமர், இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யுமாறு கூறினார்.

அத்துடன், வெலிஓயா பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களின் விவசாய காணிகள், மகாவலித் திட்டத்துக்கு என சுவீகரிக்கப்பட்டு தற்போது அங்கு. சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்று சிவில் சமூக பிரதிநிதியொருவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5,800 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரிடம் இருப்பதாகவும் அவற்றில் 777 ஏக்கர் காணிகள் மாத்திரமே தனியாருடைய காணிகள் எனவும் கூறினார்.

# பரமர் சங்கமம்



'பொய்யைச் சொன்னாலும் பெருந் தச் சொல்லவேணும் என்டொரு கூற்றுண்டு. இப்பெல்லாம் எங்கட அன்னை வானொலி தென்றல் எப்.எம்.மில் இரவு 7 மணி தொடக்கம் விநோத வேளை எண்டுமொரு நிகழ்ச்சி ஒலிபரப்பாகுது.

போன வரிசம் அந்நேரத்தில் ஒலிச்சித்திரம் அல்லாட்டி ஹலோ தென்றல் என்னும் பாடல் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சி நடந்து வந்தது. ஒவ்வொரு அறிவிப்பாளரும் ஒவ்வொரு விதம் ஏ.எம்.தாஜ்.நிகழ்ச்சி நடத்தினால் கேக்கிற பாடல் உடனேயே கிடைக்கும் மற்றவை கனபேரைப் பேசவைத்துப் போட்டு பாட்டுகளையும் பிந்திப் பிந்தித்தான் தருவினம்.

ஏ.எம்.தாஜ்ஜ்க்கு எப்பிடி முடியுது? மற்றவைக்கேன் முடியிறேல்லை எண்டது. அவை சொன்னாத்தானே விளங்கும் இப்ப விநோத வேளைக்கு வருவம் கடந்த கிழமைகளில் அறிவிப்பாளர்களால் நேயர்களிடம் சில புதிர்கள் கூறி விடைகள் கேக்கப் பட்டதைப் பரமரும் கவனிச்சன்.

முதலில் என்னெண்டா சுடப்பட்டால் எல்லாருமே செத்துப் போகினம் சுட்டால் இது சாகாதுஎதுஎண்டு கேக்கப்பட்டது. நேயர்கள் தங்கம் செங்கல் என்று பலவாறான பதில் சொல்லப்பட்ட போதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனக்கொரு யோசினை வந்தது புகைப்படம் எண்டு கடைசிவரை எவருமே அதனைச் சொல்லவில்லை.

ஏனென்டால் புகைப்படமும் சுடப்படுவதெண்டே சொல்லப்படுகிறது. இல்லாமலும் நாங்கள் சாவதில்லை எங்களைப் போன்ற இன்னொரு பிமபம் வருவதால் உயிர்ப்பனவுண்டென்றும் சொல்லலாம் அறிவிப்பாளர் சொன்ன விடையோ தோசை இது பொருத்தமாகவா இருக்குது?

வேறொரு நாள் சொல்லப்பட்டது இது ரயில் பெட்டியில் சிலர் பிரயாணம் செய்கினம்: அதில் ஒருபக்கம் ஜேமனியர், ஈரானியர், ஸ்ரேலியரான மூண்டு ஆண்களும் எதிரில் ஒரு இளம்பெண்ணும் வயோதிப மாதுவும் அமர்ந்துள்ளனர். அவ்வேளை ரயில் பெட்டியில் மின்சாரம தடைப்பட்டு இருள் சூழ்கிறது. அந்நேரம் முத்தம் இடும் சத்தத்தைத் தொடர்ந்து கன்னத்தில் அறையும் ஒசையும் கேட்டது. வெளிச்சம் தோன்றியதும் ஜேமனியர் அறவைாங்கியதால் கன்னத் தைத் தடவிக் கொண்டிருந்தார்.

முதுபெண் தன்னுள் இளம்பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியாதவாறு நாடுகெட்டுக்கிடக்கிறதெண்டும் இளம்பெண் முதுமை அடைந்தாலும் விட்டே விடுகிறார்களில்லை எண்டும் நினைக்கினம் அப்போ ஆர்முத்தம் இட்டது ஆர் கன்னத்தில் அறைந்தது? ஜேர்மனியரோ. எவரோ செய்ததுக்கு நானே வாங்கிக் கட்டிக் கொண்டேனென்ன உள்ளூர நினைத்துக் கொண்டாராம்.

நேயர்கள் பலவாறாக தமது கண்டுபிடிப்புகளைச் சொன்னார்கள். முடிவாக பதில் இப்படித்தெரிவிக்கப்பட் டது. ஸ்ரேலியர் தன்னுடைய கையில் முத்தமிடும் ஒசையை எழுப்பி ஜேர்மனியரின் கன்னத்தில் அறைந் தாராம் ஏனெனில் 50 வருடங்கள் முன்பாக ஜேமனியர் ஸ்ரேலியர்களை கொன்று குவித்ததுக்கு பழிவாங்க எனப்பட்டது.

ஈரானியர் இன்டைக்கும் ஸ்ரேலியரோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். அதை விட்டுவிட்டுத் தாண்டி ஜேமனியரைத் தாக்கி னேஎண்டடை ஏற்கக் கூறியதாகவா இருக்கு?

உப்புடி பொழுது போக்குநிகழ்சிக்கெண்டாலும் சொல்லுறதைப் பொருந்தச் சொல்ல வேணும் இல்லாட்டில் நம்பகத் தன்மை இல்லாமலெல்லலே போயிடும் என்ன நான் சொல்லுறே...

# மகாபொல கொடுப்பனவை குறைத்துள்ளது புதிய அரசு

## பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல புலமைப் பரிசில் புதிய அரசாங்கத்தால் 2500 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

முன்னைய அரசாங்கத்தால் 4000 ரூபாவாக அதிகரிக்கப்பட்ட மஹாபொல புலமைப்பரிசில் புதிய அரசாங்கத்தால் 5000 ரூபாவாக அதிகரிக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதும் அது செயற்படுத்தப்படவில்லை என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மஜித் இந்திக தெரிவித்தார்.

புலமைப் பரிசில் தொகை குறைக்கப்பட்டது பாரிய அநியாயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் முன் வைத்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் ஜூலை மாதத்தில் இருந்து மஹாபொல புலமைப் பரிசில் தொகை 5000 ரூபாவாக உயர்த்தப்படும் என்றும் மஹாபொல பெறாத ஏனைய மாணவர்களுக்கான கொடுப்பனவு ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீடொன்றுக்குள் புகுந்து இளைஞர் குழு அட்டகாசம்

வவுனியா தோணிக்கல் ஆலடி வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்று கிழமை இரவு எட்டு மணியளவில் ஆட்டோவில் வந்த இளைஞர் குழுவினர் வீட்டிற்குள் புகுந்து வீட்டில் நிறுத்தி ல்வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை அடித்து உடைத்துள்ளனர்.

தடுக்கச் சென்ற வீட்டின் உரிமையாளர் மீதும் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இச்சம்பவத்தில் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. இதேவேளை அண்மைக் காலமாக இப்பகுதியில் இளைஞர் குழுக்களின் மோதல்கள் தொடர்ந்து இடம்பெறுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# 18 வருடங்களுக்குப் பின்னர் தாயுடன் இணைந்தார் மகள்



பொப்பி என்ற 18 வயதான யுவதி, 10 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் பெருந்தோட்டம் ஒன்றில் இருந்து பிரித்தானிய குடும்பத்தினரால் தத்தெடுக்கப்பட்டார்.

இதன் பின்னர் பிரித்தானிய குடும்பத்தால் வளர்க்கப்பட்ட பொப்பி, தற்போது மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார். இந்த நிலையில் தமது பெற்றோர் இலங்கையில் இருப்பதைத் தெரிந்து கொண்ட அவர் அவர்களைத் தேடி இலங்கைக்கு வந்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் தமது பெற்றோரும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்துடன் விஜயம் செய்த பொப்பிக்கு தமது பெற்றோர் இருப்பது போர் இடம் பெறாத பெருந்தோட்டப் பகுதி என்பது தெரியவந்தது.

இந்த நிலையில் குறித்த தோட்டத்துக்குச் சென்ற அவர் ஆங்கிலத்தில் ஹோட்டல் முகாமையாளர் ஒருவரிடம் விசாரித்த போது, அருகில் இருந்து சிறிய பெண் ஒருவர் தம்மை கட்டித் தழுவியதாக பொப்பி தெரிவித்துள்ளார்.

தாம் நம்பவில்லை என்றபோதும அதுவே தம்மை பெற்றதாய் என்பதை கண்டு பொப்பி ஆனந்தமடைந்தார். இந்த நிலையில் தமது சகோதரிகளில் ஒருவர் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் பணியாற்றும் அதே நேரம் மற்றும் ஒருவர் ஆசிரியையாக பணியாற்றி வருவதாக பொப்பி அறிந்துள்ளார்.

இது குறித்து பொப்பியின் தாய் குறிப்பிடுகையில், ஏற்கனவே இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையான தமது கணவர், குடிப்பழக்கம் காரணமாக இறந்துவிட்டார். அவர் இறக்கும் போது தாம் பொப்பியை வயிற்றில் சுமந்திருந்ததாக தெரிவித்த காலிங்கா என்ற அந்த தாய், குறித்த குழந்தையை வளர்க்க முடியாமையால் தமது தோட்டத்துக்கு உல்லாசப் பயணிகளாக வந்த பிரித்தானிய தம்பதியினருக்கு தத்துக கொடுத்ததாக தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த குழந்தையான பொப்பி மீண்டும் வந்து தம்மை சந்திப்பார் என்று தாம் நம்பவில்லை என்றும் காலிங்கா குறிப்பிட்டுள்ளார்.

54. அழைப்பிதழ் ஒன்றை அனுப்பக்கூடாத சந்தர்ப்பம் எது?
(1). மரணச்சடங்கு (2). திருமணம் (3). பரிசளிப்புவிழா

55. முரளி சிறுவயது முதலே எல்லோரிடமும் பணிவு, இரக்கம், உதவும் மனம் கொண்டவனாக விளங்கி வருகிறான். எனவே எதிர்காலத்தில் நல்லவனாக இருப்பான். என ஆசிரியர் கூறினார். இக்கூற்றுக்குப் பொருத்தமான பழமொழி எது?
(1). மனமுண்டானால் மார்க்கமுண்டு
(2). விளையும் பயிரை முளையில் தெரியும்
(3). புத்திமான் பலவான்

56. சரணாலயம் என்பது
(1). மிருகங்களை விற்பனை செய்யும் இடம்
(2). மிருகங்களை பாதுகாக்குமிடம்
(3). மிருகங்களை காட்சிக்கு வைத்திருக்கும் இடம்

57. நோய்க்குக் காரணம் அசுத்தம் எனின், விபத்துக்கு காரணம்
(1). வாகனம் (2). இயந்திரம் (3). கவனயீனம்

58. கடலில் கப்பல் செல்லும், என்னும் வாக்கியத்தில் வந்துள்ள மெய்எழுத்துக்களின் எண்ணிக்கை?
(1). 5 (2). 3 (3). 4

59. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்
(1). முயலைத்தேடி அலைதல்
(2). இல்லாதபொருளைத் தேடி அலைதல்
(3). அலைந்து திரிந்து பொருளைப் பெறுதல்

60. விவசாயி ஒருவன் 10 ஆடுகளும் 8 கோழிகளும் வளர்த்தான். ஆடுகளில் ஒன்றிற்கு 3 கால்கள் எனின் அங்குள்ள ஆடுகளின் மொத்தக்கால்களின் எண்ணிக்கை எத்தனை?
(1). 40 (2). 30 (3). 39

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1. 1  2. 4  3. 1  4. 4  5. 1  6. 1  7. 4
8. 2  9. 1  10. 4  (02). 11. அன்னமுன்னா  12. முட்டைக்கோவா
13. உள்ளி  14. அன்னாசி  15. வத்தாளங்கிழங்கு  16. வெண்டி  17. பெரிய வெங்காயம்
18. காளான்  (03). 19. சரி  20. சரி  21. சரி  22. சரி  23. பிழை
(04). 24. காய்கறி வகையைச் சேர்ந்தவை  25. கீரைவகையைச் சேர்ந்தவை
26. சுவையூட்டி வகையைச் சேர்ந்தவை  27. தானிய வகையைச் சேர்ந்தவை
28. மருந்து வகையைச் சேர்ந்தவை  (05). 29. புதிய மரக்கறிகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பழங்களை பெற்றுக்கொள்ளுதல், பணச்செலவை குறைக்கலாம்  30. நீர், சூரியஒளி, வளமான மண்
31. மரவள்ளி, குரோட்டன், கங்குன்  32. தேங்காய், மிளகாய், மாங்காய்  33. கத்தரி, மிளகாய், தக்காளி
(06). 34. இயற்கை  35. செயற்கை  36. நீர்  37. சுவாசிக்கின்றன  38. காபனீரொட்சைட்டு
(07). 39. 1  40. 4  41. 4  42. 4  43. 2  44. 1  45. 2  46. 4
47. 4  48. 2  (08). 49. கிணறு  50. பாக்குவெட்டி  51. அம்மி
52. ஆட்டுரல்  53. கத்தரிக்கோல்  54. துளைப்பணம்  55. தேங்காய்துருவி
56. ஸ்ரெப்லர்  (09). 57. பிழை  58. சரி  59. சரி  60. சரி  61. சரி
(10). 62. பென்சில் கட்டர்  63. தைத்தல்  64. சுத்தியல்  65. குறடு  66. பாக்குவெட்டி
(11). 67. பென்சில்கட்டர், பஞ்சர்கருவி, ஸ்டெப்லர்  68. தேங்காய் துருவி, கப்பி, பாக்குவெட்டி
69. யானை, கழுதை, மாடு  70. வயலை உழுதல், சூடுமிதித்தல்  71. அன்று - மாட்டுவண்டி, றிக்சோ வண்டி, குதிரை வண்டி  இன்று - பஸ்வண்டி, கார், லொறி  (12). 72. யானைகளைப்
73. புகையிரதம்  74. சலவை இயந்திரம்  75. இலகுவாக்கிக்  76. அமிழ்ப்பு வெப்பமாக்கியைப்
(13). 77. 3  78. 3  79. 1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

(01). ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்

01. பற்கள் இல்லாத பிராணி எது?
(1). உடும்பு (2). ஆமை (3). பாம்பு (4). முதலை

02. ரூபாய் நாணயத்தை பாவனைக்குட்படுத்தும் நாடுகளில் ஒன்று
(1). கனடா (2). சிங்கப்பூர் (3). நோர்வே (4). மாலைதீவு

03. பேரீச்சம்பழம் அதிகமாக விளைவிக்கும் நாடு எது?
(1). ஓமான் (2). ஈராக் (3). ஈரான் (4). குவைத்

(02). தேசிய இலட்சனையில் உள்ள அடையாளங்களைக் குறிப்பிடுவது எவற்றை என எழுதுங்கள்

04. சிங்கம் - .................................... 05. பூங்கலசம் - ....................................
06. தர்ம சக்கரம் - .................................... 07. தாமரை மலர் - ....................................

(03). சரியான விடையை இடைவெளியில் எழுதுங்கள்

08. சிகிரியா குகை ஓவியங்களை வடிவமைத்த மன்னன் ....................................
09. நாடாளுமன்றத்தைச் சுற்றி ஓடும் ஆறின் பெயர் ....................................
10. மூவினமக்களும் வழிபடும் புனிதமான மலை ....................................
11. ஏழு வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள இடம் ....................................
12. பூமி சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் எவ்வளவு? ....................................
13. வானில் பறந்துகாட்டிய முதலாவது மனிதர்கள் யார்? ....................................
14. விண்வெளிக்குச் சென்ற முதலாவது விலங்கு எது? ....................................
15. உருளைக்கு எத்தனை முகங்கள் உள்ளன? ....................................
16. ஆறு எழுத்துள்ள ஒரு உலோகப் பெயர் அதன் இறுதி மூன்று எழுத்துக்கள் சேர்ந்தால் அது ஒரு கொடிய பிராணி அது என்ன?
....................................
17. தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்? ....................................

(04). பொருத்தமான விடைகளை எழுதுங்கள்

18. 17 : 25 இந்த நேரத்தை சாதாரண நேரமாக எழுதுங்கள் ....................................
19. வட்டத்திற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உண்டு ....................................
20. 1.2 என்ற எண்ணை சாதாரண பின்னத்தில் எழுதுங்கள் ....................................
21. 475cm ஐ மீற்றரிலும், சென்மீற்றரிலும் எழுதுங்கள் ....................................
22. ஒரு பெட்டியில் 49 தீக்குச்சிகள் உள்ளன. அவ்வாறான 4 பெட்டிகளில் உள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கையைக் காண்க. ....................................
23. 5 சாக்குப்புல்லை 5 மாடுகள் 5 நாட்களுக்கு சாப்பிட்டால், ஒரு மாடு ஒரு சாக்குப்புல்லை எத்தனை நாட்களுக்குச் சாப்பிடும்?
....................................
24. ஐந்தாவது சதுரஎண் எது? ....................................

25. ஒரு தோணிமூலம் முறையே 20kg, 30kg, 40kg, 60kg, 70kg, 80kg, 90kg நிறையுடைய 7 பிராணிகள் ஆற்றைக் கடந்தனர். பிராணிகளின் அதிகூடிய பாரமாக 100kg வைத் தோணி கொண்டு செல்லுமாயின் எல்லாப்பிராணிகளும் ஆற்றின் அடுத்த கரையை அடைவதற்கு குறைந்தது எத்தனை தடவைகள் தோணி பயணிக்க வேண்டும்

..............................................................................

(05). "சூழலை சுத்தமாகப் பேணாததன் காரணத்தால்தான் டெங்கு போன்று கொடிய தொற்று நோய்களால் நாம் துன்பப்படுகின்றோம்" எனும் தலைப்பின் கீழ் எழுவாய் பயனிலை கொண்ட நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் திருத்தமான முறையில் எழுதுக

26. ..............................................................................

27. ..............................................................................

28. ..............................................................................


29. ..............................................................................

30. ..............................................................................

31. ..............................................................................


(06). சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

32.



இவ்வுருவைக்குறிக்கும் பொருத்தமான சொற்கள்
(1). பறக்கும், முட்டையிடும், பழந்தின்னும்
(2). பறக்கும், பழந்தின்னும், பாலூட்டும்
(30. பறக்கும், கூடுகட்டும், முட்டையிடும்

33.




(1). நான்கு முகம் 4 உச்சி 6 விளிம்புகள்
(2). நான்கு முகம் 4 உச்சி 4 விளிம்பு
(30. நான்கு முகம் 3 உச்சி 6 விளிம்பு

34. என் அக்காவிடம் அவரது வயதைக் கேட்டால் நேரகச் சொல்ல மாட்டார். என்வயதிலுள்ள இரு இலக்கங்களையும் கூட்டினால் 3வரும் இந்த இரு இலக்கங்களையும் இடம்மாற்றிப் போட்டால் என்வயது 9 கூடி விடும் என்பார் எனின் அக்காவின் வயது யாது?
(1).30 (2).28 (3).12


35. ஒரு கொப்பி வாங்கும் பணத்திற்கு 2 அடிமட்டம் வாங்கலாம். ஒரு அடிமட்டம் வாங்கும் பணத்திற்கு 3 பென்சில்கள் வாங்கலாம். எனின், 1 டசின் பென்சில் வாங்கும் பணத்திற்கு எத்தனை அடிமட்டம் வாங்கலாம்
(1).2 (2).4 (3).6

36.



இப்படத்துடன் தொடர்புடைய நாடு
(1). இங்கிலாந்து
(2). பிரான்ஸ்
(3). இத்தாலி

37. X வரவேண்டிய பூக்கள்
(1). சிவப்பு வெள்ளைப்பூக்கள்
(2). மணம் வீசும் பூக்கள்
(30. சிவப்பு நிறப்பூக்கள்






38. ஒரு முக்கோண வடிவப்பூப்பாத்தி ஒன்றைச் சுற்றிக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. எந்தவொரு பக்க முழு நீளத்தையும் நோக்கினாலும் 6 கம்பங்களே காணப்பட்டன. அப்பூம்பாத்தியைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கம்பங்களின் எண்ணிக்கை யாது?
(1).15 (2).18 (3).24

39. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற வாக்கியம்
(1). பச்சைநிறமானவை எல்லாம் கிளிகள்
(2). கிளிகள் எல்லாம் பச்சைநிறமானவை
(3). கிளிகள் எல்லாம் பறக்கும்

40. "அசௌகரியங்களை ஏற்படுத்துதல்" என்பது
(1). உதவி செய்தல் (2). இடையூறு செய்தல் (3). பிரச்சாரம் செய்தல்

41. 6cm நீளமான காகிதக் கீலமொன்றை 2cm நீளமான 3 துண்டுகளாக வெட்டுவதற்கு வெட்ட வேண்டிய ஆகக் குறைந்த தடவை
(1). ஒரு தடவை (2). இரண்டு தடவை (3). மூன்று தடவை

42. கருத்துள்ள சரியான வாக்கியத்தைத் தெரிவுசெய்யுங்கள்
குருதி, திருகு, குறவி ..............
(1). துறவி (2). விறகு (3). குவிற

43. முள்ளம் பன்றியும் .............................. நல்ல நண்பர்கள்
(1). முயலுடன் (2). முயலுக்கு (3). முயலும்

44. சுதன் விகடகவி என்பதை ACMCA என எழுதுவான், வீடம் என்பதை AMQ என எழுதுவான். ஆயின் கடகம் என்பதை எவ்வாறு எழுதுவான்
(1). MCQC (2). CMCQ (3). MCQC

45. 3,4,6 ஆகிய மூன்று இலக்கங்களாலும் மீதியின்றி வகுபடக்கூடிய மிகச்சிறிய எண் எது?
(1).9 (2).12 (3).36

46. மாணவர்களின் கடமைகளுள் முக்கியமானது
(1). கல்வியையும் ஒழுக்கத்தையும் கற்றல்
(2). பொதுத்தொண்டுகள் செய்தல்
(3). கல்வி கற்றல்

47. ஓடுந்திறன் கூடிய தாவர உண்ணி
(1). மான் (2). முயல் (3). சிறுத்தைப்புலி

48. கப்பல் - மீகாமன் எனின் விமானம்
(1). சாரதி (2). பாகன் (3). வலவன்

49. வேலி ஒன்றுக்கு இரு தூண்களுக்கிடையே 3 கதிகால்கள் வீதம் நடப்பட்டன. மொத்தம் 30 கதிகால்கள் நடப்பட்டன. எனின் தூண்களின் எண்ணிக்கை யாது?
(1).9 (2).10 (3).11

50. தரம் 5 மாணவர்கள் அனைவரும் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுவர் என்பது?
(1). எப்போதும் உண்மை
(2). சில வேளைகளில் உண்மை
(3). பெரும்பாலும் உண்மை

51. அநுராதபுரம் என்பதைக் குறிக்கும் இரகசியக்குறியீடு எது?
(1). 1 2 3 4 3 2 1 (2). 1 2 3 4 5 3 0 (3). 1 2 3 4 5 0 3

52. முதலைகள் எப்பொழுதும்
(1). தாவர உண்ணிகள் (2). மாமிச உண்ணிகள் (3). அனைத்துமுண்ணிகள்

53. 100cm² பரப்பளவுடைய சதுரத்தை 5 சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் துண்டொன்றின் பரப்பளவு யாது?
(1). 20m² (2). 20cm² (3). 20cm

அடிப்படை உரிமைகளை வழங்குமாறு

# யாழ். மாநகரசபை சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பில் குதித்தனர்



(யாழ்ப்பாணம்)


யாழ். மாநகரசபை சாரதிகள் தமக்கான மறுக்கப்பட்ட 8 அடிப்படை உரிமைகளை வழங்கக் கோரி நேற்று திங்கட்கிழமை பணிப் பகிஷ கரிப்பில ஈடுபட்டனர். அகில இலங்கை ஸ்தல ஸ்தாபன சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையினால் நிரந்தர நியமனம் பெற்று வாகனப் பகுதியில் கடமை யாற்றுகின்ற அனைத்து சாரதிக ளுக்கும் பதில் சாரதிகள் கடிதங் கள் வழங்கல், 65 சாரதிகளுக்கான ஓய்வு அறை மற்றும் மலசல கூடம் அமைத்துத் தருமாறும், நிரந்தர நியமனங்கள் வழங்கப் படாத சாரதிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும் இவர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பினை மேற்கொண் டனர்.

தமது அடிப்படை கோரிக்கை களை நிறைவேற்றுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் தெரிவித்தபோதும், அதனை அவர் செய்து கொடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு தெரி வித்தும் அவர்கள் இதுவரையில் தமக்கான அடிப்படை வசதிகளை செய்து தரவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்கள்.

இவ்வாறு தமக்கான அடிப்படை வசதிகளை செய்துதர மறுத்தால், தாம் தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்பினை மேற்கொள்ளவுள்ளதாகவும் சாரதிகள் மேலும் தெரிவித்தனர். (25)

# கண்ணகாம்பிகை அன்னசத்திரம் மண்டபம் திறப்பு விழா



தென்மராட்சி மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தான வளாகத்தில் அமைக்கப்பட்ட கண்ணகாம் பிகை அன்னசத்திரம் மண்டபத் திறப்புவிழா நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆலய தர்மகர்த்தா சிவ.பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது. யாழ். மேலதிக அரசஅதிபர் திருமதி றூபினி வரதலிங்கம் பிரதமவிருந்தின ராகக் கலந்துகொண்டு மண்ட பத்தினைத் திறந்து வைத்தார்.

அமரர் வயிரமுத்து இராச லிங்கம் ஞாபகார்த்தமாக அவர் தம் குடும்பத்தினரால் சுமார் 75 இலட்சம் ரூபா செலவில் அமைக் கப்பட்ட இம்மண்டபம் திருமதி அன்னலட்சுமி இராசலிங்கத்தால் சம்பிரதாய பூர்வமாக ஆலய தர்ம கர்த்தாவிடம் கையளிக்கப்பட்டது.

30 அடி அகலமும் 132 அடி நீளமும் கொண்டதாக இம்மண்ட பம் அமைக்கப்பட்டுள்ளது. ஆன் மீக மற்றும் கலைநிகழ்வுகளை நடாத்தக்கூடியதாக உள்ளே மேடையும் அமைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# பௌதீக ரீதியான அபிவிருத்தி நாட்டிற்கு போதுமானதல்ல

நிமால் தெரிவிப்பு



நாட்டுக்கு பௌதீக ரீதியான அபிவிருத்தி மட்டும் போது மானதல்ல எனவும், ஆன்மிக ரீதியான வளர்ச்சியும் அவசியம் எனவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளை லுனுகல பிரதேசத் தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

நான் எனது அரசியல் வாழ்க் கையில் அடக்குமுறைகளை பிரயோகித்ததில்லை.

நாட்டை முன்னேற்றுவதற்கு வெறும் கட்டடங்கள் மட்டும் போதுமானதல்ல. ஆன்மிக ரீதி யான வளர்ச்சியும் மிகவும் முக்கி யமானது.

உலகின் அபிவிருத்தி அடைநத நாடு எனக் கூறிக்கொள்ளும் பல நாடுகளில் ஆன்மிக ரீதியான வளர்ச்சி பாரியளவில் வீழ்ச்சிய டைந்துள்ளது.

அபிவிருத்தி அடைந்த நாடு களில் மின்சார நாற்காலி, தூக்குத் தண்டனை அமுல் படுத்தப்படுகின்றது.

கடுமையான சட்டங்கள், தூக்கு மேடை போன்றவற்றின் ஊடாக குற்றச்செயல்களை தடுக்க முடி யும் என பலர் கருதுகின்றார்கள். எனினும் அவ்வாறு குற்றச் செயல்களை தடுத்து நிறுத்த முடியாது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# கட்சி தாவும் நிலைக்கு என்னைத் தள்ளாதீர்

கூறுகிறார் மேல் மாகாண முதல்வர்

(கொழும்பு)

கட்சித் தாவும் நிலைக்கு என் னைத் தள்ளிவிட வேண்டாம் என மேல் மாகாண முதலமைச் சர் பிரசன்ன ரணதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிடம் கோரியுள்ளார்.

கட்சியின் தலைவர்களும் சில அமைச்சர்களும் இணைந்து என்னை கட்சியைவிட்டு வெளியே தள்ள முயற்சிக்கின்றனர்.

முடிந்தால் என்னை கட்சியை விட்டு வெளியே தள்ளிப் பார்க்க வும் என்னைப் பதவியிலிருந்து விலக்க முடியாது. நான் வழக்குத் தொடர்ந்துள்ளேன்.

மாகாணசபையின் பெரும் பான்மை உறுப்பினர்கள் என்னை விலகச் சொன்னால் நான் இந்தப் பொறுப்பினை எவரிடமும் ஒப் படைக்கத் தயார்.

முதலமைச்சர் பதவிஙய விட்டுச் செல்ல நேரிடும் ஏன்ப தனை தெரிந்துகொண்டே இந்த விடயத்தில் இறங்கினேன்.

நான் மக்களின் கருத்துக்கு மட்டுமே தலை வணங்குவேன்.

எங்கள் பிரதமர் ஒருவரை நியமிக்க கட்சித் தலைவர்கள் இணைந்து செயற்பட வேண்டும்.

பதவி இல்லாமல் போனால் பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ செல்ல முடியும்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதம ராக்க 75 நாடாளுமன்ற உறுப் பினர்கள் விருப்பம் தெரிவித் துள்ளனர்.



ஏற்கனவே இது தொடர் பிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

பதவி விலக்குவேன் என்ற எச்சரிக்கைகளுக்கு எல்லாம் நான் அஞ்சப் போவதில்லை என பிரசன்ன ரணதுங்க அண்மை யில் மினுவன்கொடையில் வைத்து தெரிவித்துள்ளார்.

# நகைச்சுவைக்காகவே அமைச்சு பதவியைப் பெற்றேன்

என்கிறார் எஸ்.பி.

தான் அமைச்சர் பதவியை ஒரு நகைச்சுவைக்காகவே பெற் றேன் என அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கான கூட்டத்தில் இடம்பெற்ற குழப் பத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனக்கு வழங்கப்பட்ட அமைச சுப் பதவி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம், மத்திய குழு அனுமதித்த தீர்மானம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நேரத்தில் எங்களுக்கு பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நான் என்றால் நடிப்பதற்காகவே பதவியேற்றுள்ளேன். இது ஒரு நகைச்சுவை.

இவ்வாறான ஒரு நேரத்தில் தேர்தலுக்குச் சென்று எங்களால் வெற்றி பெற முடியாது. தேர் தலை தாமதப்படுத்துவதென்றால் இவ்வாறான ஒரு நடிப்பு அவ சியமான ஒன்று என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதிக்கான மக்கள் ஆணை ஜே.வி.பிக்கு பேச உரிமையில்லை

ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கிடைத்த மக்கள் ஆணை பற்றிப் பேச ஜே.வி.பிக்கு எந்தவித உரிமையுமில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித் துள்ளது.

அத்துடன் 100 நாள் வேலைத திட்டம் பற்றிப் பேசவும் அந்தக் கட்சிக்கு உரிமை கிடையாது என ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரமே 100 நாள் வேலைத் திட்டத்தை பற்றிப் பேசும் உரிமை உள்ளது.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் குறைகள் இருக்கும் பகுதிகளில் திருத்தங் களை மேற்கொண்டு, அதனை நிறைவேற்றிய பின்னர், நாடாளு மன்றத்தை கலைத்து தேர்தல் நடாத்த வேண்டும்.

அப்படியில்லாமல் ஜே.வி. பிக்குத் தேவையான வகையில் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது.

மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்யுங்கள் என்று கூறமுடியாத அந்தக் கட்சி தற் போது சிங்கத்தை போல் கர்ஜித்து வருகிறது எனவும் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார்.




சாவகச்சேரி வடக்கு மருதடி வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற ஓட்டோ விபத்தில் தெய்வாதீனமாக பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. சாவகச்சேரியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளிற்கு வழிவிடுவதற்காக ஓட்டோவைத் திருப்பியபோது ஓட்டோ தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது. பயணம் செய்தவர்கள் சிறுகாயங்களுடன் தப்பித்துக்கொண்டனர். (11)

# கமராவைக் கண்டு சரணடைந்த சிறுமி

## கேள்விக்குறியில் குழந்தைகளின் வாழ்க்கை

### சிரியாவின் அவல நிலை



சிரியாவில் கமராவை துப்பாக்கி என நினைத்து சரணடையும் சிறுமி ஒருவரின் புகைப்படம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

உள்நாட்டுப் போரால் சிரியா கடந்த நான்கு ஆண்டுகளாக சீரழிந்து கிடக்கிறது. இதன் காரணமாக இன்றுவரை அந்நாட்டு அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலை எப்படி உள்ளது? என்பது தொடர்பாக செய்தி சேகரிக்க சமீபத்தில் காசாவைச் சேர்ந்த புகைப்பட நிருபரான நாடியா அபுஹபான் என்பவர் சிரியாவில் உள்ள நகரம் ஒன்றிற்குச்சென்றிருந்தார்.

அங்கு குண்டு வீச்சில் சிதைந்த பகுதிக்குச் சென்ற அவர், தெரு ஒன்றில் தனியாக சோகத்துடன் நின்றிருந்த 4 வயதுச் சிறுமியை தனது கமராவால் படம் பிடிக்க நினைத்தார்.

அப்போது கமராவை துப்பாக்கி என நினைத்துப் பதறிய அச்சிறுமி சரணடையும் பாணி யில் கைகள் இரண்டையும் தனது தலைக்கு மேலே உயர்த்தி அழும் நிலைக்கு சென்று விட்டாள்.

நெஞ்சைப் பிழியும் இந்தப் புகைப்பட்த்தை தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள நாடியா அபுஹபான், சிரியாவில் குழந்தைகளின் வாழ்க்கை நிலை எப்படி உள்ளது? என்பதற்கு இது ஒரு சிறந்தசான்று என பதிவு செய்துள்ளார்.

# கின்னஸ்சாதனையில் கிரோபோ ரோபோ



சர்வதேச விண்வெளி மையத்தில் விண்வெளி வீரர்களுக்கு உதவும் வகையில் ஜப்பான் உருவாக்கிய "கிரோபோ" என்ற ரோபோ, இரண்டு கின்னஸ் சாதனைகளைப் படைத்துள்ளது.

விண்வெளிக்குச் சென்ற முதல் நட்பு ரோபோ, மிக அதிக உயரத்தில் உரையாடிய ரோபோ என்ற இரு சாதனைகளையும் "கிரோபோ" படைத்துள்ளது.

34 சென்ரிமீற்றர் உயரமும், 1 கிலோ எடையும் கொண்ட இந்த ரோபோ, 18 மாதங்களாக சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியிருந்தது.

இந்த ரோபோவால், மனித முகங்களையும், குரலையும் அடையாளம் காண முடியுமென இதனை உருவாக்கிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விண்வெளியில் தனிமையை உணரும் விண்வெளி வீரர்களுக்கு, ரோபோக்கள் துணையாக இருக்க முடியுமா என்பதை பரிசோதிக்கும் வகையில் "கிரோபோ" விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், விண்வெளி வீரர் கொய்ச்சி வகடாவுக்குத் துணையாக, கடந்த 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ஆம் திகதி பூமியில் இருந்து இந்த ரோபோ புறப்பட்டது.

10ஆம் திகதி விண்வெளி மையத்தை அடைந்த இந்த ரோபோ, 21ஆம் திகதி முதல் முறையாக பேசியுள்ளது. மேலும் வகடாவுடன் பலமுறை அர்த்தமுள்ள உரையாடல்களையும் மேற்கொண்டது.

மேலும் கடந்த பெப்ரவரி 10ஆம் திகதி சரக்கு விண்கலம் மூலம் இந்த ரோபோ மீண்டும் பூமியை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமானிகளின் அறையில் 2 விமானிகள் இருக்கவேண்டும்

### அவுஸ்ரேலிய அரசு அறிவிப்பு



ஜேர்மன்விங்ஸ் விமான விபத்தினை அடுத்து அவுஸ்ரேலிய அரசாங்கம் புதிய உத்தரவொன்றை விடுத்துள்ளது. பயணிகள் விமானத்தில் விமானிகள் அறையில் எப்பொழுதும் இரண்டு விமானிகள் இருக்க வேண்டும் என அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது.


50 அல்லது அதற்கு மேற்பட்ட பயணிகளுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேவைகளை முன்னெடுக்கும் அனைத்து விமானங்களுக்கும் இந்த விதி பொருந்தும் என அந்நாட்டு போக்குவரத்து அமைச்சர் அறிவித்துள்ளார்.

மேலும், இந்த விதியானது உடனடியாக அமுலுக்கு வரும் எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வாரம் இடம்பெற்ற ஜேர்மன்விங்ஸ் விமான விபத்தில் துணை விமானி வேண்டுமென்றே விமானத்தை விபத்துக்குள்ளாக்கியதாக நம்பப்படுகின்ற நிலையில், அவுஸ்ரேலியா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மன்விங்ஸ் விமான விபத்தில் விமானப் பணியாளர்கள் உட்பட 150 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

# தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி



பாகிஸ்தானில் தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா நடாத்தி வரும் தாக்குதல்களில், கடந்த 10 வருடங்களில் 48 ஆயிரம் பொதுமக்கள் உள்ளிட்ட 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாக, அணுவாயுத போருக்கு எதிரான சர்வதேச வைத்தியர்கள் கூட்டமைப்பு, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையிலேயே இந்தக் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை, 81 ஆயிரத்து 860 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பல்வேறு தரப்பினர் மேற்கொண்ட ஆய்வுகள், ஐ.நா. அமைப்பு வெளியிட்ட தகவல்கள், அரச அமைப்புகளின் தகவல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# காஷ்மீரில் தொடர் மழை

## வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு



ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக ஸ்ரீநகர் உட்பட ஏழு மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களிற்கு செல்லுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பாடசாலைகளுக்கு 3 நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தொடர் மழையை அடுத்து மாநில அமைச்சர்கள மேற்கொள்ள வேணடிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய முதல்வர் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டியுள்ளார்..

இந்த நிலையில் காஷ்மீரில் மேலும் 6 நாட்களுக்கு மழை தொடரும் என அந்நாட்டு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை பொதுமக்களின் 48இற்கும் அதிகமான வீடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

## கே.பி. மீதும்...

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அப்படியான நிலைமை இல்லை என்று கூறியிருந்தார்.

அந்த வகையில், விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டின் பேரில் தடை விதிக்கப்பட்டுள்ள சில புலம்பெயர் அமைப்புகள் மற்றும் நபர்கள் மீதான தடையை நீக்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, வெளிநாடுகளில் பல்வேறு வணிக செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் இந்த அமைப்பினர், மீண்டும் போராட்டத்திற்காக ஒருங்கிணைவதற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருப்பது குறித்து தகவல் கிடைத்திருப்பதாக பிரதியமைச்சர் அஜித் பெரேரா கூறினார்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் இந்த மீள் உருவாக்கல் முயற்சியானது உண்மையிலேயே மிகவும் ஆபத்தானதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை தொடர்ந்து முன்னெடுப்பது குறித்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடந்த வருடம் நவம்பர் மாதமளவில் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார் என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கையின்படி ஐரோப்பிய ஒன்றியத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மீண்டும் தடை விதிக்கப்பட்டமைக்கு ஊடகங்கள் பெரியளவு முன்னுரிமை அளிக்கவில்லை.

எனினும் புலிகள் அமைப்பு மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கிய போது அச்செய்திக்கு பாரிய முன்னுரிமை அளிக்கப்பட்டு ரணில் விக்ரமசிங்கவே இந்த நடவடிக்கையின் பின்னணியில் உள்ளதாக சேறு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தொடர்பிலும் வெளிவிவகார பிரதியமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தடை நீக்கம் செய்த போதும் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் மூன்று மாதங்களுக்கு நீதிமன்ற உத்தரவு செயல்படுத்தப்படவில்லை என்றும் அதனால் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனிடம் இருந்து சர்வதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பணத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க அன்று எடுத்த இந்த நடவடிக்கையால் புலிகள் அமைப்புக்கு மீண்டும் தலைதூக்க முடியாது போனது.

கே.பி.யை வெளிநாட்டில் கைது செய்து இலங்கைக்கு அழைத்து வந்து அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காது அவரை அரச மாளிகையில் தங்கவைத்து கடந்த ஆட்சியாளர்கள் அவரிடம் இருந்து பணம் பெற எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் கே.பி.யை கைது செய்யாதது ஏன் என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த பிரதி வெளிவிவகார அமைச்சர், கே.பி. தொடர்பில் விசாரணை நடத்த இரகசிய பொலிஸார் கால அவகாசம் கோரி தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

## மைத்திரி...

திகதிகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## யாழ். - கொழும்பு...

யாழ்ப்பாணத்திற்கு 7.15 இற்கு வருகை தரும் யாழ்தேவி புகையிரதம் 6.05 இற்கு அங்கிருந்து தனது பயணத்தினை ஆரம்பிக்கும். கொழும்பில் இருந்து 6.15 இற்கு பயணத்தினை ஆரம்பிக்கும் இரவு தபால் புகையிரதம் எதிர்வரும் 01 ஆம் திகதியில் இருந்து, 8.40 மணிக்கு புறப்படும்.

காலை 5.50 மணிக்கு பயணத்தினை கல்கிசையில் இருந்து ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் 5.45 மணிக்கு கல்கிசையில் இருந்து புறப்படும்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும், 10.00 மணிக்கு யாழில் இருந்து புறப்படும் புகையிரதம் இரண்டாம் திகதிக்குப் பின்னர், காலை 9.10 மணிக்கு யாழில் இருந்து புறப்படுமென்றும் யாழ். புகையிரத பிரதான அதிபர் மேலும் கூறினார். (25)

## கிளிநொச்சியில்...

பகுதியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் புறப்படுவதற்காக பின்னோக்கிச் செலுத்தும்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த கிருஸ்ணபிள்ளை தயாளன் (வயது - 31) எனும் நபரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (160)

## இந்திய மீனவர்...

கடல் வலயத் தடைச்சட்டங்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில் கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறியதும் எல்லைதாண்டியதுமான தொழில் நடவடிக்கைகளால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படும் அதேவேளை எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளன.

தடை செய்யப்பட்டதான தொழில் முறைகளை நிறுத்துமாறு கோரி தொடர்ச்சியாகப் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள், முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றையும் தாண்டி இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் தொடர்வதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்திய மீனவர்களின் இழுவை மீன்பிடித் தொழிலை முற்றாக நிறுத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் தென் பகுதியிலிருந்து வருகின்ற மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள பிரதமரின் இக்கூற்று நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் எமது கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை இயல்பாக முன்னெடுக்க முடியும் என்பதுடன் இதன்மூலம் அவர்களது வாழ்வாதாரமும் பொருளாதாரமும் முன்னேற்றம் காணுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் மட்டுமன்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற 28 வகையான பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் நாம் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்குத் தெரியப்படுத்தியுள்ள நிலையில் அவை தொடர்பிலும் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பை...

பதிவு செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வரும் நிலையில், தமிழரசு கட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்ய வேண்டாமென தடுப்பவர்கள் யார் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறுவதைப் போன்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களாக இருந்தால், அந்த முக்கியஸ்தர்களுக்கு விருப்பம் இல்லை என்பதனை தெளிவாக மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்.

தமிழரசுக் கட்சியில் இருக்கும் சிலர் பதிவினை ஆதரிக்கும் அதேசமயம், அதில் இருக்கும் முக்கியஸ்தர்கள் எதிர்க்கின்றார்கள் என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதில் விரும்பம் இல்லை என்பதனை மக்களுக்கு சொல்ல வேண்டிய தேவை வந்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கனடாவிற்கு சென்ற தமிழரசுக் கட்சியின் பிரதிச் செயலாளர் சுமந்திரன் கனடா வானொலிக்கு கொடுத்த பேட்டியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு விட்டதென்ற ஒரு கருத்தினைக் கூறியிருக்கின்றார்.

4 கட்சிகள் இணைந்து பதிவு செய்துவிட்டோம். பதிவு செய்யவில்லை என்பது பிழையான கருத்து என்ற தொனியில் பொய்யான செய்தியை கொடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கட்சியின் பதிவினை மேற்கொள்வதற்கான ஆவணங்களை தயார்ப்படுத்தி வைத்துக் கொள்ளுமாறு கூறியிருந்தார்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கட்சி பதிவு செய்யப்படவில்லை என்பது யதார்த்தமான உண்மையான விடயம். அதற்காக எல்லோரும் பேசிக்கொண்டிருப்பதுடன், போராடிக்கொண்டிருக்கின்றோம் என்பதும் ஒரு உண்மையான விடயம்.

அதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், புலம்பெயர் தமிழர்கள் மத்தியில், தவறான, பிழையான கருத்துக்களை ஏன் சுமந்திரன் கொடுக்க வேண்டுமென்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தேர்தல் ஆணையகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 3 கட்சிகள் இருக்கின்றன என கடிதம் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதம் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவினால் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 4 கட்சிகள் இருக்கின்றோம். 3 கட்சிகள் இருப்பதாக மாவை சேனாதிராஜாவினால் கொடுகக்கப்பட்ட கடிதம் பதிவு அல்ல என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கட்சியின் பதிவு என்றால், சின்னம் ஒதுக்கப்பட வேண்டும், ஆவணங்கள் கையளிக்கப்பட வேண்டும், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கட்சியை எடுத்துக் கொண்டால், அதற்கென்று ஒரு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் பல கட்சிகள் இணைந்து அக்கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், கூட்டமைப்பு கட்சியாக பதிவு செய்யுமாறு மட்டுமே வலியுறுத்தினோம், அதைத் தவிர கட்சியில் இருந்து யாரையும் விட்டுக் கொடுக்க சொல்லி வலியுறுத்தவில்லை என்றார்.

மேலும் பதிவு விடயத்தினை சீர்செய்த சரியான தளத்தில் கொண்டு செல்ல வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

## விசாரணைக்கு...

கொண்டுள்ளமையினாலும், நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவை அறிந்து கொண்டு இதனை அறிவித்துள்ளார்.

## முன்னணியில்...

பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் விபரம் வருமாறு,

**வேம்படி மகளிர் கல்லூரி**

9ஏ சித்தி பெற்றவர்கள்

தமிழ் மொழி மூலம்

சி.கிருத்திகா, த.லக்சிகா, இ.ஆர்த்தி, ச.மாதங்கி, தே.சுதனிகா, உ.கஜனி, மு.காயத்திரி, க.கம்சனா, ச.கஸ்துரிகா, யோ.ஷிவானி, ர.கிருஷ்ணாகினி, யோ.சஞ்சீவி, ர.சரண்யா, ச.சாரங்கா, சி.திவாகரி, பா.திவியா, க.கனிஸ்டிஜா.

9ஏ சித்தி பெற்றவர்கள்

ஆங்கில மொழி மூலம்

சி.அபிநயா, இ.ஆதித்தியா, ர.யோகினி, யோ.கேசினி, வி.லூசியா, க.மாதுரி, ச.மதுசா, அ.நிருஜா, ம.பிருந்தினி, சு.சுபநிலா, சா.தேனுஷா.

8ஏபி சித்தி பெற்றவர்கள்

ஆங்கில மொழி மூலம்

ஜெ.ஆரபி, சி.ஹர்ஷனா, ர.ஜனோலியா, ந.லலிதாங்கி, க.மதினி, மு.நிவேதா, ம.பிரியந்தி, வே.சாய்கா, சி.சிவசங்கரி, அ.தயாஷாகரி.

8ஏசி சித்தி பெற்றவர்கள்

க.சிவசொரூபி, பா.ஸ்ரீசாயுச்ஜா, ர.திவ்யாளினி, கி.வாசுகி, ப.கேனுஜா, சி.கஜன்சிகா.

தமிழ் மொழி மூலம்

8ஏபி சித்தி பெற்றவர்கள்

கு.விதுஷா, த.அபிவர்ணா, சி.கனகாம்பரி, தி.லக்ஷா, ஜெ.சாருகா, சி.சிந்துஜா, சி.சிவனுஜா, இ.டர்ஷி, பொ.ஜெமிக்கா, தி.மயூரி, த.மாதங்கி, தே.சரண்யா, மோ.ஆரபி, த.கீர்த்திகா, கி.கிருஷாந்தி, க.பர்மிதா, வ.சங்கீர்த்தனா, ந.சரண்யா, த.வோகினி.

8ஏசி சித்தி பெற்றவர்கள்

செ.சுஸ்மிதா, க.ஜெனனி, ஆ.கௌசியா, ப.பவித்திரா, த.சங்கவி, த.லௌசிகா, ஈ.மகிசியா, வி.பிரியங்கா, ம.கார்த்திகா, க.லக்ஷி, இ.மதுசா, ம.பிரகாசினி, ந.சரண்யா.

கு.சர்விகா - 8ஏஎஸ், ஜ.மாதங்கி - 7ஏ2பி, க.தயனுகா - 7ஏபிசி, கு.பிரகவி 7ஏ2சி.

தமிழ் மொழி மூலம்

7ஏ சித்தி பெற்றவர்கள்

ஜெ.ஜெபான்சி, சி.சதுர்சனா, ஜெ.சோபினி, இ.சௌம்யா, ர.தர்சிகா, ர.கஜனு, க.மைதிலி, த.நிதுர்சிகா, நீ.தர்மினி, வி.நிலுக்சிகா, சி.வைஷ்ணவி, சி.ஆதிரை, சு.டிற்சிகா, ச.கனிமொழி, செ.கீர்த்தனா, ச.சங்கீர்த்தா, சா.தனுசா, சி.தருஜா, சோ.கரணிகா, ம.மதுஷா, மோ.சாருஜா, த.தாரணி.

**யாழ். இந்துக் கல்லூரி**

9ஏ சித்தி பெற்றவர்கள்

தமிழ் மொழி மூலம்

ஆ.அரங்கன், ப.மிஷாந்த், ச.சண்முகபவன், க.சிறிதுசன், மி.வக்சலன், இ.நிதுஷன், ச.சிவகுமார், ர.சோபன்.

9ஏ சித்தி பெற்றவர்கள்

ஆங்கில மொழி மூலம்

ஸ்ரீ.ராகுலன், சி.சாரங்கன், வே.தவேசன், சு.திவாகரன், ப.வைகுந்தன், வி.விக்னாகஜன், ர.ஹரிகரன், சி.இந்துஜன், த.தக்சயன், ஸ்ரீ.ஜனுஜன்.

தமிழ் மொழி மூலம்

மா.அமலன், த.கீர்த்திகன், ஜோ.அஜித்குமார், பா.ஜெயசாந்தன், சு.லாவண்யன், ஜெ.பிரணவன், ச.சாய்சுதன், ப.சர்வேஸ்வரசர்மா, து.தனுஷன், சி.அனோஜன், த.டினோஜன், சி.மிதுசானந், இ.டினோஜன், கு.கிருஷ்ணராஜ், சி.லக்சிகன், உ.பிரதீப், தி.பிரியங்கன், இ.சஜிந்திரா, ந.சுமித்திரசாந், ம.தனுஜன், யோ.விஜய்கரன், க.ஜதுர்சன்.

8ஏ சித்தி பெற்றவர்கள்

ஆங்கில மொழி மூலம்

ப.சாருஜன், ர.செந்தூரன், லோ.சிவலக்ஷன், பி.கஜேந்திரன், பா.லோகபிரியன், மு.நிருன், நே.சரவணன், ம.கோகுலன், பா.பகீதரன், பி.சாள்ஸ் அன்ரனி.

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

9ஏ சித்தி பெற்றவர்கள்

க.புவிதாஸ், க.ராகுலன், சி.துளசியன், ஜெ.துசியந்தன், ச.சுகிர்தன், சி.லலிதகாந்தன், செ.அனோஜ், கு.கவிதாஸ், ர.ராகவன், இ.தனீசன், பு.அனிமாருதன்.

சி. லம்போதரன் - 8ஏபி, த.தயாநிதி - 8ஏசி, த.தயாரூபன் - 8ஏசி, சு.திலக்ஷன் - 8ஏசி, சி.துவாரகன் - 8ஏஎஸ், சி.அகலயன் - 8ஏபி, ர.சிந்துஜன் - 8ஏபி, ஜெ.ஜெனிவன் - 8ஏபி, செ.ஜெரோம் இருதயராஜ் - 8ஏபி, பீ.ஜோய்சன் - 8ஏசி, சி.கோகுலன் - 8ஏபி, க.பிரதீஸ் - 8ஏசி, ம.ராகுலன் - 8ஏபி, கு.தனுஷன் - 8ஏசி, சு.தெய்வேந்திரன் - 8ஏசி, இ.கபிலன் - 8ஏபி.

**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

9ஏ சித்தி பெற்றவர்கள்

ந.கௌசிகன், ஜெ.கஜீபன், ஜெ.சத்தியதரண்யா, கு.கிருத்திகா.

8ஏபி சித்தி பெற்றவர்கள்

ந.மிதுசிகா, சி.ப்ரணவி, சி.இராகவி, பு.புருகாசினி

ரா.சுஸ்மிதா - 8ஏஎஸ், கு.தர்மிலா - 8ஏசி, தெ லக்ஷன் - 8ஏஎஸ், ஜெ.பூவள்ளல் - 8ஏசி, இ.அறிவன்பன் - 7ஏபிசி, தி.பிரசன்னா - 7ஏ2சி, ப.தேனுகன் - 7ஏபிஎஸ், தே.பிரவீனன் - 7ஏபிசி, வ.சுவேதிகா - 7ஏபிசி, ஆ.கோகில்ராஜ் - 6ஏ2பிசி, சி.அனுஜன் - 6ஏ3சி, பா.சரத்குமார் - 6ஏ2பிசி, க.நிஷாந்தன் - 6ஏபிஎஸ், வி.தயன் - 6ஏ2பிஎஸ், ப.கஸ்தூரி - 6ஏ2சிஎஸ், பே.தர்சிகா - 6ஏ2பிசி, இ.ஆதித்தன் - 5ஏ3பிசி, ஜெ.டபரேரா - 5ஏ3பிசி, க.சுபாசினி - 5ஏ2பிசிஎஸ், ச.நர்த்தனா - 5ஏபி3சி, சு.லிவிதா - 5ஏபி3சி, ர.சுபீட்சன் - 4ஏ2பி2சிஎஸ், வ.தனுசன் - 4ஏபி3சிஎஸ், வி.சிந்துயன் - 4ஏ2பி2சிஎஸ், ச.கபிலன் - 4ஏ2பி2எஸ், லூ.கியூரிபௌஸ்ரீனா - 4ஏ2பி2சி, மோ.டினோஜிதா - 4ஏ2பி3சி, இ.நேசானந் - 3ஏ2பி2சிஎஸ், பி.பிரகாஸ் - 3ஏ3பி2சிஎஸ், மோ.சாருசன் - 3ஏ2பி3சிஎஸ், தி.றோசியா - 3ஏபி3சி2எஸ். (இ.ப,12,17,25,66,90,70)

# சுதந்திரக் கட்சியை உடைக்க ஐ.தே.கட்சி சதி செய்கிறது

## சந்திரிக்கா கடும் சீற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த ஐக்கிய தேசியக் கட்சி சூழ்ச்சி செய்வதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

வேண்டுமென்றே ஐக்கிய தேசியக் கட்சி, மகிந்த ராஜபக்சவை தேர்தலில் போட்டியிட ஊக்குவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சந்திரிக்கா இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தியைப் போன்று சுதந்திரக் கட்சியை கட்டுப்படுத்தி வருவதாக கொழும்பு ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஸ சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட அனுமதிக்கப் போவதில்லை என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் கொள்கை வகுப்பாளராகவும், கட்சி மறுசீரமைப்பு பணிகளையும் சந்திரிக்காவே மேற்கொண்டு வருகின்றார்.

மகிந்த ராஜபக்ஸ தேர்தலில்



போட்டியிட்டால் அது சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையை வெகுவாக குறைக்கும் எனவும் அதனையே ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவதாகவும் சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் அரசியல் மீள் பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் தந்திரோபாய நகர்வாக சுட்டிக்காட்டியுள்ளார்.



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதா[...] தரப்பரீட்சையில் 9ஏ சித்திகள் பெற்ற சத்தியதரண்யா [...] சேகரம், கிருத்திகா குலதாஸன் நவரட்ணராஜ் கௌ[...] ஜெயரட்ணம் கஜீபன், ஆகியோரை காணலாம். (16[...]

## சஞ்சிகை வெளியீ[...]

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கைகள் அலகு மூன்றாம் அணி மாணவர்களின் சஞ்சிகை இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

'விசைச் சிறகுகள்' எனும் இச்சஞ்சிகை வெளியிடும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் [...] அரியரட்ணம் கலந்துகொ[...]வுள்ளார்.

அத்துடன் சிறப்பு வி[...]னராக கலைப்பீட பீடா[...] வி.பி.சிவநாதன் க[...] கொள்வார். அறிமுகவுரை[...] யாழ்.பல்கலைக்கழக சட்[...]றை விரிவுரையாளர் கோச[...] கலாநிதி கந்தையா ஸ்ரீகணே[...] மதிப்புரையினையும் வழ[...]வுள்ளனர்.

## உடற்தகுதித் தேர்வு



சிறைச்சாலைக்கு உத்தியோகத்தர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கான உடற்தகுதி தேர்வு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த உடற்தகுதி தெரிவு கடந்த சனிக்கிழமை(28) ஆரம்பமாகியதுடன் இன்று செவ்வாய்க்கிழமை வரையில் இடம்பெறவுள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களாக இணைந்துகொள்ள வடமாகாணத்தில் 1,150 பேர் விண்ணப்பித்திருந்ததாகவும், அவர்களுக்கான நேர்முகத்தேர்வே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறுவதாக உடற்தகுதி தேர்வை நடத்தும் அதிகாரியொருவர் கூறினார்.

## முறைதவறிய கடற்றொழில்; கட்டுப்படுத்தக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாற்றில் சட்டவிரோதமானமுறையில் மீன்பிடியில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்தும்படி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மக்களைச் சந்தித்த பிரதமரிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் இராஜித சேனாரத்னாவினால் 73 தென்னிலங்கை கடற்றொழிலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது 250 இக்கு மேற்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபடுவதாகவும் இவர்களே சட்டவிரோதமான முறையில் வெடிபொருட்கள் மற்றும் கடலில் பயன்படுத்தமுடியாத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியிலும் தென்னிலங்கை மீனவர்கள் ஈடுபடுகின்றனர் எனவும் பிரதமரிடம் தெரிவித்துள்ளார். (160)

## கல்வாரித் திருவி[...]

(யாழ்ப்பாணம்)

யாழ்.அடைக்கல அன்[...] தேவாலயத்தில் நடைபெ[...] ஈழத்துக் கல்வாரித் திருவ[...]வில் நாளை 1 ஆம் தி[...] பெரியவியாழன் அனுஸ்[...]னங்கள் நடைபெறவுள்ள[...] பங்குத் தந்தை வண.பிதா.[...] இராஜேஸ்வரன் அடிகள் [...]வித்தார்.

மாலை 5 மணிக்கு [...] பலி, பாதம் கழுவுதல், [...] நற்கருணைப்பவனி எ[...] தோற்றம் என்பன நிகழவுள்ள[...]

## சமச்சீரற்ற வருமானம் ஐ.நா.அறிக்கையில் தகவ[...]

(கொழும்பு)

இலங்கையில் பாரியளவில் வருமான ஏற்றத்தாழ்வு காணப்படுவதாக ஐக்கிய நாடு[...] அமைப்பு குறிப்பிட்டுள்ளது[...]

ஐக்கிய நாடுகள் அ[...]பின் மிலேனிய அபிவிரு[...] இலக்கு குறித்த அறிக்கை[...] இந்த விடயம் தெரிவிக்க[...]டுள்ளது.

இலங்கையில் வறுமை [...]யளவில் ஒழிக்கப்பட்டு [...]ளதுடன் வாழ்க்கைத் தர[...] உயர்த்தப்பட்டுள்ளதாக சு[...] காட்டப்பட்டுள்ளது.

எனினும், வருமான ஏ[...] தாழ்வு குறிப்பிடத்தக்[...] இடைவெளியைக் கொ[...]பதாகத் தெரிவிக்கப்பட்டு[...] செல்வந்தர்களுக்கும் வ[...] களுக்கும் இடையிலான [...] வெளி தொடர்ச்சியாக [...] படுவதாகக் குறிப்பிடப்ப[...]ளது.

## ஏகாதசி தீர்த்தம்

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஏகாதசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு அபிசேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், அதனையடுத்து ஸ்ரீபத்மநாராயண சுவதமி ஸ்ரீதேவி பூமாதேவி புடைசூழ வீதியுலா எழுந்தருள்வார். (68)

# ஆயிரம் மில்லியனில் அரச மாளிகை ஆச்சரியத்தில் மூழ்கினார் ரணில்

## கொழும்பில் அவரே தகவல்

யாழ்ப்பாணத்திற்கு தான் விஜயம் செய்திருந்த போது அங்கு நிர்மாணிக்கப்பட்ட அரச மாளிகையை பார்க்க சென்றதாகவும் அதனை நிர்மாணிக்க ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் நேற்று நடைபெற்ற இலவச வைபை வலயத்தை ஆரம்பித்து வைத்து பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாளிகையில் 10 அறைகள் உள்ளன. இரண்டு உணவு அருந்தும் அறைகள் உள்ளன. சமையல் அறை அரை மைல் தூரம் செல்ல வேண்டும்.

ஜனாதிபதிக்கும் அவரது பாரியாருக்கு தனித் தனியான அறைகள் உள்ளன. ரயில் நிலையத்திற்கு பயன்படுத்தக் கூடிய அளவில் அந்த அறைகள் பெரியதாக இருக்கின்றன.

உணவறைகள், ஏனைய அறைகள் மற்றும் நீச்சல் தடாகம் என்பன மிகவும் ஆடம்பரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

200 ஏக்கர் நிலத்தில் இப்படியான ஆடம்பர மாளிகையை நிர்மாணிக்கும் போது பட்டினியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அதனை பொறுத்து கொண்டிருந்தது மிகவும் ஆச்சரியமானது எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## பப்புவா நியூகினியாவில் நிலநடுக்கம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா பசுபிக் கடலில் பப்புவா நியூகினியாவில் கடும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

7.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக வடகிழக்குப் பகுதியில் உள்ள கொகோபோ நகரிலுள்ள தலைநகர் பகுதிகள் அதிர்வடைந்துள்ளன.

வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கியதனால் அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர்.

கொகோபோ நகரிலிருந்து 50 கிலோ மீற்றருக்கு தென்கிழக்கில் பூமிக்கு அடியில் 65 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் [...]தி விபத்[...] இருவர் மரணம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் கிர[...] சந்தியில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பா[...] இழந்து மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இரு[...] உயிரிழந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தி[...] ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றது[...]

உயிரிழந்த இருவரும் கிரான் பிரதேசத்தை சேர்ந்தவர்[...] எனவும் ஒருவர் செங்கலடி நீர்ப்பாசன திணைக்களத்தில் [...] புரியும் ஆதித்தன் (வயது 34), மற்றும் விநாயகம் ஜெயபிர[...] (வயது - 24) எனவும் தெரிவிக்கப்பட்டது.

சடலங்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைச[...] பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸ[...] மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்ட[...]